ஜகன் மோகினி

74

ஜூலை
1955

JAGAN MOHINI

ESTD. 1923

அணா
நான்கு

ஜயந்தி சிந்தனைகள்

★

ஒப்பிலா நாட்கள் நான்கு

★

ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தி
ஸ்ரீ ராம ஜயந்தி
ஸ்ரீ நிவாஸ ஜயந்தி
ஸ்ரீ தேவி ஜயந்தி

★

வை. மு. ஸ்ரீநிவாஸன், M. A., B. L.,
(அட்வகேட்)
அவர்களின் 8-வது வெளியீடு.

★

48 படங்களுடன்

★

ஜகன்மோகினி காரியாலயம்,
26, தோட்டித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

1955 ரூ. 1-8.

பகவத்விஷய ரஸாநுபவம்

காஞ்சி மஹா: வித்வான் ஸ்ரீ. உ. வே. ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

[திருவாய்மொழியின் இரண்டாம் பதிகம் ஸம்ஸாரிகளுக்கு உபதேசம்செய்ய அவதரித்தது. அதில் ஐந்து பாசுரங்களிற்செய்யப்பட்ட உபதேசங்கள் கீழே விவரிக்கப்பட்டன. ஆறுவதுபாசுரம் தொடங்கி இனி விவரிப்போம்.]

ஆறும் பாட்டு

6. பற்றிலனீசனும் முற்றவும் நின்றனன்
பற்றிலையாய் அவன் முற்றிலடங்கே.

பகவான் ஸௌசீல்ய குணமே வடிவாயிருப்பவனென்று இப்பாசுரமுபதேசிக்கின்றது. ஸௌசீல்யம் எனினும் சீலம் எனினும் ஒக்கும். ஸர்வேச்வரன் பெருமைகளுக்கெல்லாம் எல்லையிலே நிற்பவனாதலால் மிகவும் அற்பர்களான ஸம்ஸாரிகளால் அவன் அணுகத் தகுந்தவனாவனோ? என்னும் சங்கைக்கு இடமறும்படி அவனது சிலகுணம் தெரிவிக்கப்படுகிறது. மிகப்பெரியான் மிகச் சிறியாரோடும் புரையறக் கலந்து பரிமாறுகைக்கு உறுப்பான குணமே சீலம் (அல்லது) ஸௌசீல்யம் எனப்படும். இதனை வடநூலார்,

MADRAS

"மஹதோ மந்தைஸ் ஸஹ நீரந்த்ரேண
ஸம்ச்லேஷ: — சீலம்"

என்பர்கள். பாசுரத்தில் "பற்றிலன் ஈசனும்" என்றுள்ளது. 'எம்பெருமான் பற்றில்லாதவன்' என்று பொருள் கொள்ளலாம்படியிருக்கும். ஆனால், பூருவாசாரியர்கள் அங்ஙனம் பொருள் கொண்டிலர். "ஸர்வேச்வரனேயாகிலும் ஆச்ரிதரெல்லார் பக்கலிலு மொக்க ஸ்நேஹஸ்வபாவனாயிருக்கும" என்று ஆறுயிரப்படியில் திருக்குருகைப் பிரான் பிள்ளானென்னுமாசிரியர் பணித்தது நோக்கத் தக்கது. பற்றிலானென்பது பற்றிலனென்று குறுகிக் கிடக்கிறதென்பர். பற்றோடு கூடியுள்ளவனென்றபடி. அடியார்களுடன் புரையறக் கலந்து பழகுவதையே இயல்வாகவுடையவனென்கை. இங்கு ஈசன் என்னுஞ் சொல்லையிட்டது கருத்தோடு கூடியது. உலகில் சாமானியனல்லவொருவன் எல்லாரோடுங் கலந்து பழகுவானாயின் அதையாரும் கணிசிக்கமாட்டார். குணமாகக் கொள்ளமாட்டார். மிகப் பெரியானொருவன் சிறியாரோடு கலந்தானென்றால் அதற்கே உள் குழைந்து நிற்பர்கள். விதுரருடைய திருமாளிகையில் கண்ணபிரான் புகுவதற்கு முன்னும் பின்னும் பல்லாயிரவர் புகுந்திருப்பர்; அதைப்பற்றி ஒரு கொண்டாட்டமும் கண்டிலோம்; கண்ணபிரான் புகுந்தது பற்றியே,

"முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ!
பன்னகாதிபப்பாயலோ பச்சையாலிலையோ!
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்கு
என்னமாதவஞ் செய்ததிச் சிறுகுடிலென்றான்"

என்று உவகை வெள்ளமிட்ட பாசுரம் தோன்றியது. எனவே, பராத்பரனாயிருப்பவன் சிறியாரோடு கலந்து பரிமாறுவதே குலாவத் தகுந்ததாயிருத்தலால் அந்தப்பரத்துவத்தைக் காட்டுதற்கே இங்கு ஈசன் என்னுஞ் சொல் அமைந்தது. ஈச்வரனாயிருக்குந் தனமை இல்லையாயின் இந்த சீலகுணம் நிறம்பெற இயலாதாதலால் ஸர்வேச்வரத்வம் எடுத்துக் காட்டப்பட்டதென்க. மேருமலை, கைலாஸமலை, பாற்கடல் என்னுமவை பரத்வம் பொலிந்த பொருள்களேயாகும். ஆனால் அவை ஒருவர்க்கும் எட்டாதனவாதலால் அவை கொண்டு பயனில்லை. காஷ்ட லோஷ்டங்கள் மிகவும் எளியனவாயிருந்தும் மேன்மையுடையனவல்லாமையின் அவை கொண்டும் பயனில்லை. மேன்மை கிடக்குமிடத்தேயுள்ள நீர்மையேயன்றோ பாராட்டுதற்குரியது. ஈசனாயிருந்து வைத்து ஸம்ஸாரிகளோடு கலந்து பழகுந் தன்மையனா யிருப்பதே தன்னேற்றம்.

இதற்கு மேல் 'முற்றவும் நின்றனன்' என்றது தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய் என்றபடி ஸகலவித பந்துவுமாகவும், உண்ணுஞ்சோறு பருகுநீர்த் தினனும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன் என்றபடி தாரக போஷக போக்ய வஸ்துக்களெல்லாமாகவும், அறிவு ஒழுக்கம் ஜாதி முதலியவற்றால் ஏற்றத் தாழ்வு பெரிதுமுடையஎவ்வகுப்பினர்க்கும் ஒருங்கே அடிபணியத் தக்கவனாகவும் நின்றான் என்றவாறு. ஆக, இங்ஙனம் பகவானுடைய தன்மையைப் பேசி "பற்றிலையாய் அவன் முற்றிலடங்கே" என்று, ஸம்ஸாரிகளான நம் போன்றவர்கள் செய்ய வேண்டுவது உபதேசிக்கப்படுகிறது; 'அடங்குமின்' என்று ஏவற்பன்மையாகப் பேச வேண்டுமிடத்து 'அடங்கு' என்று ஒருமையாகப் பேசியிருப்பது உலகத்தை நோக்கிச் சொல்லுவதாதலின். ஓ ஓவுலகே! என்று விளிச்சொல் வருவித்துக்கொள்ளல் வேண்டும். 'அவன் முற்றில் அடங்கே' என்றது அப்பெருமானுடைய ஸகலவித கைங்கரியங்களிலும் ஊன்றியிருக்கக்கடவை என்றபடி; அவனேயே எல்லாமாகக் கொள்ளக்கடவை என்னவுமாம். 'பற்றிலையாய்' என்றது 'பற்றிலன்' என்பதன் முன்னிலை. எனவே, பாசுரத்தின் தொடக்கத்திலுள்ள 'பற்றிலன்' என்னுஞ் சொல்லுக்குக் கொண்ட பொருளே இதற்குங் கொள்ளத்தகும். அவன் உன்னிடத்துப் பற்று வைத்திருப்பதுபோலவே நீயும் அவனிடத்துப் பற்றுடையனாய் என்றபடி.

[illegible] என்பதற்குப் பற்றில்லாதவன் என்னும் [illegible] பொருந்துமென்று கொள்வாருமுளராத [illegible] அன்னவர் [illegible] க்குச் சேரவும் உரை செய்வர் பெரியார். ஈசனும்—ஷாட்குண்ய ப[illegible]ரணனாய் ஸ்ரீவைகுண்டநிலயனை ஸர்வேச்வரனும், பற்றிலன்— [illegible]ங்குள்ள நித்யமுக்தர்களிடத்தும்

13192

பற்று இல்லாதவனாகி, முற்றவும் நின்றனன்—இன்று வந்து பணியின்ற ஸம்ஸாரிகளுக்கே ஸர்வஸ்வமாக இராநின்றான்; பற்றிலையாய் —நீ ஹேய விஷயங்களிலே வைத்திருக்கிற பற்றை விட்டவனாகி, அவன் முற்றில் அடங்கே—அப்பெருமானையே எல்லாமாகப் பற்றுவாயாக என்பதாம். இது பட்டருடைய நிர்வாஹம்.

ஏழாம் பாட்டு

7. அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு, ஈசன்
அடங்கெழிலஃதென்று அடங்குகவுள்ளே

எம்பெருமான் அடியார்களோடு புரையறக் கலந்து பழகுமியல்வினனாயினும், உண்மையில் அளவிட முடியாத உபய விபூதிச் செல்வத்தையுடையனா யிருக்கையாலும், நாம் மிகப் புல்லியரா யிருக்கையாலும் அவனோடு நமக்குச் சேர்த்தி எளிதாயிராதே; கடலிலே புகுந்தவொரு துரும்பானது அலைமேல் அலையாகத் தள்ளுண்டுவந்து கரையிலே சேருகிறாப்போலே அப்பெருமானது ஐச்வரிய அலைகள நம்மைத் தள்ளிவிட மாட்டாவோ?* அம்மானாழிப் பிரானவன் எவ்விடத்தான் யானார்! * என்று இருக்கப் பண்ணுமோ என்று ஒரு சங்கையுண்டாக, அதற்குப் பரிஹாரமுணர்த்துமுபதேசப் பாசுரமிது. எம்பெருமானது ஐச்வரியம் அளவற்றதென்பது உண்மையே; அப்படிப்பட்ட ஐசுவரியமெல்லாம் நமது தந்தையின் செல்வமேயன்றோ வென்று அநுஸந்தித்து நாமும் அந்த ஐச்வரியத்தினுள் அந்தர்ப்பவிக்கப் பெற்றால் இருக்க [பின் வாங்க] ப்ரஸக்தியில்லையாமென்றதிப் பாட்டு. எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள உறவை யுணரவே கூச்சம் குலையும் என்பது தேர்ந்த கருத்து. ஸம்பந்தவுணர்ச்சி உண்டாகுமத்தனையே போதுமென்பதற்குப் பூருவாசார்யர்கள் ஒரு கதையெழுதியுள்ளார்கள்; அது வருமாறு:—

ஒரு நகரத்தில் வணிகர் தலைவனொருவனிருந்தான். அவன் வெளிநாடுகளில் நீண்டகாலம் வஸித்து வர்த்தகஞ் செய்து விசேஷமாகப் பொருள் படைக்க விரும்பி த்வீபாந்தர யாத்திரை செய்ய முயன்றான். அப்போது அவனது மனைவி கருக்கொண்டிருந்தாள். அப்போதே அவன் புறப்பட்டு த்வீபாந்தரம் சென்று சேர்ந்தான். பிறகு இரண்டொருமாதம் கடந்தபின் அவனது மனைவி மகனையீன்றனள். அம்மகன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சுக்கில பக்ஷச் சந்திரன்போன்று வளர்ந்து வருகின்றான். த்வீபாந்தரத்தில் வர்த்தகஞ் செய்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவ்வணிகன் பிள்ளைபிறந்த செய்தியை யறிந்து பேரானந்தமடைந்து விரைவிலேயே ஊர்வந்து சேர்தற்கு முயற்சி செய்தும் மேன் மேலும் வர்த்தகத்தில ஏற்பட்ட நிர்ப்பந்தங்களினால் கடுக மீண்டு வரமுடியாமல் நெடுங்காலம் அங்கேயே தங்கி விட்டான். மகனுக்கு உரிய வயது வாய்த்தவளவில் தானும் தனது குலத்தொழிலாகிய வர்த்தகத்தையே கைப்பற்றி வந்தான். அவனுக்குப் பல வயதுகள் சென்றும் தகப்பன் த்வீபாந்தரத்திலேயே வாழ்கின்றான். பின்பொரு நாள் அவ்வணிகன் மகன்

தொழில் முறையில் வெளிநாடு சென்றிருந்து பல சரக்குகளுடன் கடல் வழியாய் ஊர்த் துறைமுகம் வந்து சேர்ந்தான். அவன் வந்த கப்பலிலேயே அவனது தந்தையும் த்வீபாந்தரத்திலிருந்து பல மூட்டைகளுடன் வந்து சேர்ந்திருக்கிறான். இவர்களுக்குப் பரஸ்பரமுள்ள உறவை இருவருமறியார். அறிவதற்கு ப்ரஸக்தி யில்லை யன்றோ. அந்தக் கப்பல் துறைமுகம் சேர்ந்தவுடனே குமாரன் தனது மூட்டைகளை இறக்குவதாக உத்தேசித்த வோரிடத்திலேயே தகப்பனும் தான் கொணர்ந்த மூட்டைகளை இறக்க நினைத்தனன். இவ்விருவரும் தங்களுக்குள்ள பிதா புத்ர பாவ ஸம்பந்தத்தை யறியாதவர்களாதலால் இறக்குமதியிடத்தைப் பற்றின விவாதம் இவர்களுக்கு முற்றிவிட்டது 'இவ்விடத்தை நானே முதலில் உத்தேசித்தேன்' என்று இருவரும் நெடும் போதாக வாதாடுகின்றனர். அப்போது இவ்விருவருடையவும் உறவு முறையை உணர்ந்திருப்பாரொரு கிழவனுர் இந்த விவாதம் வளர்ந்து செல்வதைக்கண்டு 'அந்தோ! உறவறியாமல் இது என்ன விவாதம்!' என வருந்தி 'இவன் உன் தந்தை, நீ அவனது மகன்; இவன் உனது புதல்வன்; நீ இவனது தந்தை; ஆயிருக்க எதுக்கு இங்ஙனே வீண் விவாதம்?' என்று அறிவித்தனர். அதன் பிறகு அங்கு என்ன நடந்திருக்க வேணும். ஸம்பந்த வுணர்ச்சி உண்டானவுடனே கழிந்த நாளைக்குச் சோகித்து இருவர் சரக்கும் ஒரு சரக்காய், தந்தை ரக்ஷகனய் மகன் ரக்ஷ்யனும் விவாதம் நீங்கி இருவரும் பேரின்ப வெள்ளத்திலே நின்றனர். அது போலவே நாமும் நிருபாதிக பிதாவாகிய ஸ்ரீமந்நாராயண னுடைய "உன்றன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது" என்னும்படியான உறவின் உறுதியை உற்று நோக்கி அவனோடு விவாதப்படுவதை விட்டொழித்தோமாகில் அவனது செல்வமெல்லாம் நமது செல்வமேயென்று பாவிக்கலாகி, அது பாவனை மாத்திரமன்றிக்கே அனுஷ்டான—அநுபவ பர்யந்தமாய் விடும்.

ஓரரசன் தன்னுடைய குமாரனைச் சிறியதொரு ரதத்தில் அழைத்துச் சென்று விநோதங்களைக் காட்டி வருமாறு மந்திரிக்குக் கட்டளையிட்டனன். மந்திரியும் அப்படியே அழைத்துச் செல்கின்றான். செல்லும் வழியில் ராஜ குமாரன் பெரியதொரு உத்யான வனத்தைக் கண்டான்; மிக அற்புதமாகக் காணப்பட்ட அத்தோட்டத்தினுள் சென்று திளைக்கக் கருதினன். ஆனல் வாசலில் யமபடர்களைப்போல் கத்தியும் கையுமாக நிற்கும் காவலாளர்களைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றான். உண்மையில் அது அரசனுடைய தோட்டமேயல்லது மற்றொருவனதன்று; அரசகுமாரன் அதனை யறிந்திலன். மந்திரியை நோக்கிச் சொல்லுகின்றான்—'இத்தோட்டத்தினுள் சென்று திளைக்க ஆவலுடையேன்; இச்சேவகர்கள் தடை செய்யாதபடிக்கு இவர்களுக்குப் பணம் காசு கொடுத்துவிட்டு உள்ளே புக முடியுமா?' என்று. அதற்கு மந்திரி 'அப்பா! இஃது உனது தந்தையின் தோட்டங் காண்; எதற்காக அஞ்சுகின்றாய்? தாராளமாக உள்ளே சென்று எதுவும் செய்யலாமே' என்றான். பிறகு அங்கு நடந்ததென்ன?

ராஜகுமாரன் அச்சமும் கூச்சமுமின்றி அதிகாரஞ் செலுத்திக் கொண்டே உள்ளே புக்கு யதேஷ்டமாகத் திரிந்து வந்தனன். ஸம்பந்த உணர்ச்சி உண்டாகாத போதைய நிலைமையையும், அஃது உண்டானபோதைய நிலைமையையும் இக்கதைகளினு லறியலாம்.

எட்டாம் பாட்டு

8. உள்ளமுரைசெயல் உள்ளவிம்மூன்றையும்
உள்ளிக்கெடுத்து இறை யுள்ளிலொடுங்கே.

எம்பெருமானுக்கு அடிமைசெய்ய வேணுமாகில் என்னவுபகரணங் களைக்கொண்டு செய்வதென்ன; ஒன்றும் புதிதாக ஸம்பாதிக்க வேண்டாமல் ஏற்கெனவே அமைந்திருந்துள்ள மனமொழி மெய் கள் மூன்றையும் இவை பகவானுக்கு அடிமை செய்ய உறுப்பா கவே கண்டவை' என்று அநுஸந்தித்து, அவற்றைப் புறம்புண் டான விஷயங்களினின்றும் மீட்டு எம்பெருமான் பக்கலிலே ஊன்ற வைப்பது என்று உபதேசமளிப்பது இப்பாட்டு.

"யத் மநஸா த்யாயதி தத் வாசா
வததி தத் கர்மணா கரோதி"

என்று வேதம் ஓதிற்று. நெஞ்சு நினைப்பதை வாய் சொல்லு கிறது; வாய்சொன்னதை உடல் செய்கிறது என்பது மேற் சொன்ன வேத வாக்கியத்தின் பொருள். எதையேனும் நினைப் பதற்கென்றே ஏற்பட்டிருக்கிற நெஞ்சை விஷயாந்தர சிந்தனையில் நின்றும் மீட்டு உள்ளே யடக்கினவாறே எம்பெருமானைச் சிந்திப்ப தற்கு உறுப்பாகும். அந்தச் சிந்தனை முற்றி வெளியே வழிந்து சொற்களாய்ப் புறப்படுகைக்கு உடலாகும் வாக்கு. வாக்கினால் துதிக்கத் துதிக்கத் தலைவணங்கித் திருவடிகளிலே விழுந்து ஸகல கைங்கரியங்களும் செய்தற்கு உறுப்பாகும் உடல். இவ் வுறுப்புக்களை இன்றாகப் புதிதாய்த் தேட வேண்டாதே முதலி லேயே எம்பெருமான் இவற்றை உண்டாக்கி வைத்தனனாதலால் "உள்ள இம்மூன்றையும்" என்றார். இந்த மனமொழி மெய்கள் மூன் றையும் ஆராய்ந்து பார்க்க வேணுமென்கிறார்—இவை எதற்காகப் படைக்கப்பட்டன? இப்போது எவ்விதமான உபயோகத்தில் இவையிருக்கின்றன? என்று ஆராய்ந்து பார்க்க வேணுமென்கை. அங்ஙனம் ஆராய்ந்து பார்த்தவளவில், 'பகவத் விஷயத்திலீடுபடு வதற்காகக் கண்டவிவை ஸ்வரூபத்திற்குத் தகாத விஷயங்களிலே பரந்து சென்று இடக்கின்றன' என்று அறியலாகும். உடனே அந்த விபரீத ப்ரவ்ருத்தியை மாற்றி [விஷயாந்தரங்களினின்றும் மீட்டு] பாழிலும் மேட்டிலும் பாய்கிற நீரைப் பள்ளத்திலும் பயிரி லும் பாய்ச்சுவாரைப்போலே ப்ராப்த விஷயத்திலே [பகவத் விஷயத்திலே] ஆக்கப் பார்ப்பது.

ஒன்பதாம் பாட்டு

9. ஒடுங்கவவன்கண் ஒடுங்கலுமெல்லாம்,
விடும்பின்னுமாக்கை விடும்பொழுதெண்ணே.

பகவான் தன் விஷயத்தில் உபயோகப்படுத்துவதற்காகவே தந்தருளின உறுப்புக்களை அவன் விஷயத்தில் உபயோகப் படுத்துமத்தனையே வேண்டுவதென்று கீழ்ப்பாட்டிற் செய்த உப தேசத்தைக் கேட்ட வுலகர்கள் ''ஆழ்வீர்!' நாங்கள் ஸ்வாதந்தி ரியம் பாராட்டி அதனால் பகவான் விஷயத்தில் ஊற்றமற்றிருக் கிறோமல்லோம்; பகவானுடைய போக்யதையை அறியாதிருக்கிறோ மல்லோம்; அப்ராப்தங்களான விஷயாந்தரங்களை விட்டுப்ராப்தனான அவனையே பஜிக்கவேணுமென்னும்விருப்பம்மிகவுடையோம். ஆயி னும் பஜிக்கவொட்டாதபடி விரோதிகள் கனத்திருக்கையாலன்றோ நாங்கள் பஜியாமலிருக்கிறோம்' என்ன; நீங்கள் அப்பெருமானைக் கிட்டவே அந்த விரோதிகளெல்லாம் சடக்கென விட்டு நீங்கும் என்கிறார் இப்பாட்டில்.

'விரோதிகள் தொலைந்தாலொழிய பகவானை அணுக முடியாது; பகவானையணுகினாலொழிய விரோதிகள் தொலைய மாட்டா' என்று அந்யோந்யாச்ரயம் சங்கிக்க நேரும். 'தடாகத்தில் விழுந்து நீராடினாலொழியக் குளிர்போகாது; குளிர்போனா லொழியத் தடாகத்தில் தோய்ந்து நீராடமுடியாது' என்றால் துணிந்து தடாகத்திலே விழவேண்டு மத்தனையன்றோ. அது போலவே துணிந்து பகவானையணுகவே விரோதிகள் தொலையு மென்க. 'நானே யீச்வரன்' என்று இறுமாந்திருக்குமிருப்புத் தவிர்ந்து எம்பெருமானுடைய ஆட்சிக்கு இசைந்து அவனது அபிமானத்தினுள்ளே அடங்குங்கள்; அப்படியடங்ினவாறே [எல்லாம் ஒடுங்கலும் விடும்] ஆத்மாவுக்கு ஸங்கோசத்தை விளைப் பவையான அவித்யை முதலானவை யாவும் வாஸனையோடே விட்டுக்கழியும்; நல்லதைச் செய்யவே தீமைவை தன்னடையே விட்டுக் கழியுமென்பது சொல்லவேணுமோ?

அவித்யை முதலானவை கழிந்து போய்விட்டால் பின்னை இந்நிலத்திலே செய்யவேண்டிய காரியம் ஏதென்ன; [பின்னும் ஆக்கைவிடும் பொழுது எண்? என்கிறார். பிள்ளை லோகாசாரியர் முமுக்ஷுப்படியில் ''பேறுதப்பாதென்று துணிந்திருக்கையும் பேற்றுக்கு த்வரிக்கையும்'' என்றருளிச் செய்த கணக்கிலே 'பேறு கைபுகுந்ததாவது எப்போதோ?' என்று அதில் பதற்றங் கொண்டிருக்க வேணுமென்கை. காமினியானவன் தன்னுடம்பி லழுக்கைக் கழற்றிப் போகத்தில் அந்வயிக்கும் சமயம் எதிர் பார்த்திருப்பதுபோல, சரீரம் முடியும் நாளை எதிர்பார்த்திருத்தல் வேண்டுமென்கை. ''கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள் தங்குமேல் என்னாவி தங்கும்'' என்ற ஆண்டாளை போலே பதறியிருக்கவடுக்கும்.

ராஜஸூயத்தில் தருமபுத்திரரை நோக்கிக் கண்ணபிரான் பணித்த வார்த்தை ஒன்றுண்டு—''க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்'' என்று. இவ்வுலகிற் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து தீர்த்தவர்கள் மரணத்திற்கு அஞ்சாமல் மரணகாலத்தை மிக்க குதூஹலத்தோடு எதிர்பார்த்திருப்பர்

களாம். இதனைச் சிறிது விவரிப்போமிங்கு. இவ்வுலகில் பலவகையான துக்கங்களுள்ளன; அவற்றுள்ள மரண துக்கம் மிகப்பெரிது. மரணமென்றவுடனே மஹத்தான துக்கமுண்டாகின்றது. இவ்வுலகத்தோடு அதுகாறுமிருந்த ஸம்பந்தமென்ன, பந்துமித்ரபுத்ர களத்ராதிகளோடிருந்த ஸம்பந்தமென்ன, இன்னமும் தன்னுடையனவாகப் பாவித்த வீடுவாசல் முதலிய பலவகைப் பொருள்களோடு வைத்துக்கொண்டிருந்த ஸம்பந்தமென்ன ஆகிய இவற்றையெல்லாம் விட்டுவிட நேருகின்றது. தாம் செய்ய வேணுமென்று சங்கற்பித்திருந்த பலவகைக் காரியங்கள் நிறைவேறாமே குறைபட்டு நிற்கின்றன... இப்படிப்பட்ட பல காரணங்களினால் மரணமென்றால் யாருக்குமே ருசிப்பதில்லை. அத்தகைய மரணகாலத்தைச் சிலர் எதிர்பார்த்திருப்பர்களென்றும் எதிர்பார்த்திருக்க வேணுமென்றும் கூறுவது பொருந்துமோவெனின் பொருந்தும்.

பரலோகமுண்டென்றும், பாப புண்யங்கட்குப் பலன் இடைத்தே தீருமென்றும், ஸ்வர்க்க நரகங்கள் புண்ய பாப பலன்களாமென்றும் நம்பிக்கையுள்ளவர்களுக்கு ஜீவித்திருந்த தாம் செய்த பலவகைப் பாவங்களை நினைத்து அவற்றின் பலன்களை அநுபவிக்க நேரிடுமேயென்கிற அச்சத்தினால் மிக்க துக்கமுண்டாகக் கூடியது. ஜீவித்திருந்த காலத்திலோவென்னில், சிலர் உலகவியாபாரங்களில் மண்டிப் பரலோகத்தைப் பற்றி நினைக்க அவகாசமும் பெறாமல் விஷய சுகங்களுக்காகப் பாவஞ் செய்கிறார்கள். சிலர் பரலோகத்தையும் பாபபுண்யங்களையும் ஈச்வரனையும் இல்லை செய்து சரீர ஸுகத்திற்காக வேண்டியதெல்லாஞ் செய்யலாமென்று நினைத்துப் பாவஞ் செய்கிறார்கள். சிலர் தாம் நீண்டகாலம் ஜீவித்திருக்கப் போவதாகவும், கடைசிகாலத்தில் பரலோகத்திற்கு வேண்டியதைச் செய்துகொள்ளப் பார்க்கலாமென்றும் நினைத்து, உள்ளவரையில் ஸாம்ஸாரிகஸுகத்திற்காகப் பாவச் செயலில் இழிந்து பிறகு மீளமுடியாமல் நிற்கின்றனர். மிருத்யுவோ நமது எண்ணங்களையும் காரியங்களையும் ஸமயஸந்தர்ப்பங்களையும் நோக்காமல் சடக்கெனவந்து விடுகின்றது. ஆகையால் பெரும்பாலும் எல்லோருமே மிருத்யுவுக்கு அஞ்சி வருந்துகின்றனர்; ஆனால் உண்மையான பக்தர்களும் உலகத்தின் போக்கை நன்றாய்க் கண்டறிந்தவர்களும் எப்போதும் பகவத் பாகவதர்களைச் சிந்தை செய்துகொண்டு ஆத்மானந்தத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களும் மரணத்தைப்பற்றிச் சிறிதும் வருந்தமாட்டார்கள். அவர்கள் மரணத்தை ஓர் உத்ஸவமாக நினைத்துப் பெருமகிழ்ச்சியே கொள்வர்கள்.

தன்னுடைய தேசத்தையும் தாய் தந்தையரையும் உற்றாருறவினரையும் விட்டுப் பரதேசம்போய்ப் பொருளீட்டும் ஒரு சிறுவன் தன முயற்சி கைகூடி மிக்கபொருள் திரட்டிக்கொண்டு தன் வீடு திரும்பும்போது சிறிதும் வருந்துவதில்லையன்றோ; பந்துக்களையும் ஸ்வதேசத்தையும் விட்டு நீண்டகாலம் பரதேசத்

இல் வஸித்த அச்சிறுவன் தன்னில்லம் திரும்பி ஸ்நேஹமயியான மாதாவையும் பந்துபாந்தவர்களையும் எப்பொழுது பார்க்கப் போகிறோமென்று ஆவலோடு காத்திருந்தவன் அச்சமயம் நெருங்கும்போது மஹத்தான ஸந்தோஷத்தையே அடைகிறான். ஸாத்யமானவளவும் விரைவில் தன்னில்லம் போய்ச் சேர நினைக்கிறான். தந்தைதாயரைக்கிட்டி அவர்களது அன்புக்கு நாம் எப்பொழுது இலக்காகப் போகிறோமென்று குதுகலிக்கிறான். ஏனென்றால், அவன் பரதேசத்தில் நீண்டகாலமிருந்தாலும் தன் முயற்சியில் ஸித்திபெற்று நிரம்பிய பொருளைத் திரட்டியிருப்பதால் ஒருவகையான ஆத்மஸந்தோஷத்தையடைந்திருக்கிறான். இவ்விதமாகத் தான் திரும்பும்போது தகப்பனார் தன்னை மிகவும் பாராட்டப் போகிறாரென்கிற நம்பிக்கை அவனது மனத்தை உத்ஸாஹப்படுத்திக் கொண்டிருக்கின்றது. தன் முயற்சியில் ஸித்தியடைந்த புதல்வன் தன் தந்தையிடம் திரும்பிப்போகும்போது அடைகின்ற ஆனந்தம் விலக்ஷணமாயிருக்கும். அதுபோல் உண்மையாகத் தன்னிலைமையை யறிந்த பக்தனானவன் இவ்வுலகத்தில் தன் கடமைகளை ஒழுங்குபடச் செய்து எம்பெருமானது நியமனத்தினால் ப்ராரப்தபோகம் முடிந்து பிதாவான அவ்வீச்வரனது ஸன்னிதானத்திற்குப் போகுங்காலம் கிட்டும்போது (அதாவது) இவ்வுலகத்தின் துக்கமயமான நிலைமையிலிருந்து முடிவாக விடுபடும்போது மஹத்தான ஆனந்தத்தை யடைகின்றான். அவ்வானந்தத்தை எதனோடும் ஒப்பிட முடியாது. ஆனதுபற்றியே ஆக்கை விடும்பொழுதெண்ணே என்கிறாழ்வார்.

(தொடரும்)

அபூர்வ ராமாயணம்

ஸ்ரீ ப்ர. ப. அ. ஸ்வாமியின்

அபூர்வ க்ரந்த ரத்னம்

160 பக்கங்கள் ரூ. 1—8.

" இவரொருவரால்தான் இத்தகைய முறையில் எழுதமுடியும்" என்று பிரஸித்த அறிஞர்களால் போற்றப்பட்டது.

மேனாட்டுத் தத்துவம்

இரண்டாம் பாகம்

1. பிளேட்டோவின் கருத்துக்களுக்கு மூலம்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

பிளேட்டோவின் கற்பனை உலகமான குடியரசு (Republic) என்ற நூலின் நயங்களைப் பருகுவதற்கு முன்பு, பிளேட்டோவின் மனத்தை ஒரு தக்க உருவாக்கிய சான்றோர்களைப்பற்றிச் சற்று ஆராய்வது நம் கடமையாகும். பைத்தகோராஸ், பார்மினிடீஸ், ஹெராகிளிட்டீஸ், சாக்ரடீஸ் இவர்கள் தாம் பிளேட்டோவின் கருத்துக்களுக்கு மூலம் என்று ரசல் மொழிகின்றார். அவர் பைத்தகோராஸின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இவர் கொள்கைகளைக் கற்றுக்கொண்டார். சமயச்சாயை இவர் நூலில் அடிப்பதற்குக் காரணம் பைத்தகோராஸ்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. அழிவின்மையில் நம்பிக்கை, அப்பிராகிருதத்தில் அசைக்க முடியாத ஒரு பிடிப்பு, அறிவின் ஆற்றல், அறிவுக்கு அப்பாலுள்ள நேர்முக அனுபவம் (mysticism)—இவை யாவும் பைத்தகோராஸ் தந்த வளமே.

பார்மினிடீஸ் உலகம் வெறும் தோற்றம் என்றார். ஒரு தத்துவம்தான் நிலைபெற்றிருக்கும். அந்தத் தத்துவம் காலம் கடந்தது, அழிவற்றது. ஆதலால் உலகத்தில் தோன்றுகின்ற யாவும் மாயையே என்ற முடிவுக்கு வந்தார். இந்தத் தத்துவம் பிளேட்டோ கண்ட அறிவு வட்டத்தில் இடம் பெறுகின்றது.

ஹெராகிளிட்டீஸ் உலகத்தில் ஒன்றும் நிலைபெற்றிருக்கவில்லை, எல்லாம் மாறிக்கொண்டே வருகின்றன என்ற கருத்திற்கு உருக்கொடுத்தார். இந்தக் கருத்தையும் பிளேட்டோ ஏற்றுக்கொண்டார். இவ்விருவர் கருத்துக்களும் பிளேட்டோவுக்குமுன் ஒரு புதிய உலகத்தை விரியும்படிச் செய்தன. மாறி மாறி ஓடும் பொறிகள் தரும் அறிவு பயனற்றது. அக்காரணம்பற்றியே பொறிகளுக்கு அப்பால் மிளிர்கின்ற ஆத்ம ஞானத்தை மனிதன் பெற வேண்டும் என்ற உண்மையைப் பிளேட்டோ தம் நூலில் வற்புறுத்துகின்றார்.

மனிதன் மாயாத தன்மையை நாட வேண்டும் என்று சாக்ரடீஸ் சொன்னார். அந்த மங்காத மங்களம்—காலத்தால் சிதைவுறாத நித்திய மங்களந்தான்—அழியாத் தத்துவத்தின் தன்மையாகும். இத்தகைய தத்துவத்திற்கும் அவர் கண்ட அரசியலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? என்று ஒருவர் வினவலாம். மங்கள வடிவமாயுள்ள அந்தத் தத்துவத்தை எட்டிப் பிடிக்கக் கூடிய அளவு உலகத்து அரசியல் அமைய வேண்டும் என்ற ஆர்வம் பிளேட்டோவுக்கு உண்டு. அது எப்படி மாறுதோ அப்படி அரசியலும் இருத்தல் வேண்டும். மாசுமறுவற்ற அந்தத்

தத்துவம்போல், உலக அரசியலும் பூர்ணத்துவத்தைப் பெற்றால்தான் எல்லா நலங்களும் உலகத்தில் தோன்றும் என்ற கற்பனையை அவர் சிந்தை வளர்த்தது. அரசியலை நடத்தக்கூடியவர்களும் பேரின்ப வாழ்க்கையின் மர்மங்களை நன்கு உணர்ந்திருப்பது மிகவும் அவசியமாகும். ஓர் அரசியல்வாதியிடத்தில் செறிந்த ஞானம் இருக்க வேண்டும்; அவனிடத்தில் அந்தப் பெரு நலத்தைக் காணக்கூடிய ஒரு நல் நடத்தை திகழ வேண்டும் என்று பிளேட்டோ அடிக்கடி சொல்லுவார். அரசு செலுத்துகிறவனுக்குக் கல்வி உண்ணுஞ் சோறும் பருகும் நீராய் அமைவது சாலவும் நன்று. பைத்தகோராஸ் கணித சாத்திரப் பயிற்சியில்லாமற் போனால் ஞானம் பெற முடியாது என்கிறார். இதே கருத்துத்தான் பிளேட்டோவின் சிந்தைமீது ஆணை செலுத்தக் காண்கின்றோம்.

மேலும் அகவுயிர் வளர்ச்சிக்கு ஓய்வு மிகவும் அவசியம் என்று கிரேக்க ஞானிகள் கருதினார்கள். அரசியல் வாதிகளுக்குக் குடும்ப[illegible]வுமே ஒன்றுமே இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் அவர்கள் தம் சக்திகள் யாவையும் அரசியல் பீடத்தின்மீது சமர்ப்பிக்க முடியும். இக்கருத்திலிருந்து பிறக்கக்கூடியது இதுதான். அறிவிற் சிறந்த ஒரு பிரபு ஆட்சிதான் தோன்றும். பிளேட்டோ கொண்ட கருத்தைத் துருவி ரசல் ஆராய்கின்றார். எந்தவிதமான ஞானத்தைப்பற்றிப் பிளேட்டோ பேசுகின்றார் என்பது விளங்கவில்லை. ஞானம் உள்ளவன் தவறமாட்டான் என்று பிளேட்டோ சொல்லுகிறாரே: ஆனால், வாழ்க்கையில் ஞானமுள்ளவன் தவறக் காண்கின்றோமே என்ற ஐயத்தை ரசல் எழுப்புகின்றார். ரசல் பிளேட்டோ கண்ட ஞானத்தின் உண்மை இயல்பை அறியவில்லை என்று தோன்றுகிறது. ஆத்மாவை நேரில் கண்டு அனுபவித்த ஒரு ஞானத்தைப் பற்றிப் பிளேட்டோ பேசுகின்றார். இதைத்தான் சாக்ரடீஸும் இயம்பினார். ஞானமுள்ளவன எக்காலும் தவறமாட்டான் என்பதற்கு ஆத்ம ஞானம் பெற்றவன் என்ற பொருளைத்தான் நாம் தரவேண்டும, ரசலுக்கோ இந்திரிய ஞானத்திற்குப் புறம்பாக ஓர் அகவுயிர் ஞானமிருக்கிறது என்ற நம்பிக்கை எள்ளளவும் இல்லை என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.

இத்தகைய ஞானமிருந்தாலும், அதற்கேற்ற அரசியல் அமையுமா என்ற கேள்வியை ரசல் கிளப்புகின்றார். பிரபு ஆட்சிகள் தவறாமலில்லை. வேந்தர்கள் முட்டாள்களாய் இருந்திருக்கிறார்கள். போப்புக்களும் பிழைகளைப் புரிந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன சொல்லுகிறீர்கள்? என்று ரசல் நம்மை வாதுக்கு இழுக்கின்றார். உண்மையான அறிவாளிகள் நடத்தும் அரசியல் பிளேட்டோவின் கற்பனையிலே முளைக்குமே தவிர வேறில்லை என்று முடிக்கின்றார். ரசல் தருகின்ற கருத்தும் நம் ஆராய்ச்சிக்குரியதுதான்.

2. பிளேட்டோவின் குடியரசு

(Republic)

பிளேட்டோ எழுதின பல சம்பாஷணைகளில் பலவித குணங்களின் தலைமைகள் ஆராய்ச்சிசெய்யப்பட்டிருக்கின்றன. தார்மீகஸ்

ஸில் (Charmides) 'மிதம்' (Temperance or Moderation) என்ற விஷயம் இடம் பெறுகின்றது. இலைஸிஸ் (Lysis) என்ற பேச்சில் நட்பைப்பற்றிய ஆராய்ச்சி நிகழ்கின்றது. லாக்கஸ் (Laches)என்ற சம்பாஷணையில் தைரியம் (Courage) என்ற விஷயத்தைப்பற்றிச் சர்ச்சை நடக்கின்றது. பிளேட்டோ வகுத்த குடியரசில் எது நியாயம்? (Justice) என்ற பொருள்தான் நம் சிந்தையைக் கவர் கின்றது. நியாயத்தை அடிப்படையாகக் கொண்டே பிளேட்டோ வின் குடியரசு எழுகின்றது என்று கூறலாம்.

திராஸிமாக்கஸ் (Thrasymachus) என்பவன் 'வல்லான் வகுத் ததே வாய்க்கால்'(Might is right) என்று வாதிக்கிருன். வலிவால் ஆற்றல் பெற்றவர்கள் அமைப்பதே நியாயம் என்று இவன் கூறுவதை சாக்ரடீஸ் மறுக்கின்ருர். உயர் ஞானம் தருவதே நியாயம் என்று பலசான்றுகள் கொண்டு சாக்ரடீஸ் மொழிவது இங்கு நோக்கத் தகுந்தது. பண்டைச் சான்ருேர்கள் சிருஷ்டி மூன்று விதங்களாய் அமைந்திருக்கிறது என்று கருதுகின்றனர். இயற்கை நிலை, மனித நிலை, தெய்வ நிலை என்று படைப்பைப் பிரிக்கலாம். மனிதன் நடுவு நிலையில் நிற்கின்ருன். மனிதன் மனித நிலையோடு நின்று விடுகிறதில்லை. தன் உள்ளத்தில் கலகஞ் செய்கின்ற ஆசைப் பேய்களைத் தன் அறிவுவாள் கொண்டு மாய்த்துவிட்டுத் தன உள்ளக் கோட்டைச் சுவர்கள்மீது அன் பிலே தோய்ந்த ஞானக் கொடியை நாட்டி விடுகின்ருன். மனிதன் அமரனுய் விடுகின்ருன். இக் கருத்து பிளேட்டோவிலும், அவர் மாணுக்கஞன அரிஸ்டாடிலிலும் திகழ்கின்றது.

மனிதன் இயற்கையில் சுயநலம் உள்ளவன். அவன் ஒழுங் காய் இருப்பது காரணம் சட்டத்திற்குப் பயந்தே என்று வாதிக் கிற அரசியல் வாதிகள் இருக்கின்றனர். மனிதனிடத்தில் தெய்வ நிலை துயின்றுகொண்டிருக்கிறது. அது விழித்தெழா மற்போகாது. அந்தத் தெய்வ நிலையை நிலைநாட்டுவதற்கே அரசியல் ஏற்பட்டிருக்கிறது என்ற திருவுள்ளம் படைத்தவர் பிளேட்டோ என்று ஐயமின்றிச் சாற்றலாம். சனகன் போன்ற ஞானிகள் தான் உண்மையான அரசியல் நடத்தமுடியும் என்ற முடிவுக்குப் பிளேட்டோ வந்துவிட்டார். இதில் வியப்பில்லை. கொண்ட கருத்திற்கேற்றவாறேதான் அவர் அரசியலும் அமையு மன்ருே?

பிளேட்டோவின் 'குடியரசு' என்ற நூலை மூன்று பாகங் களாய்ப் பிரிக்கலாம். முதல் பாகத்தில் ஒரு கற்பனை உலகம் விரியக் காண்கின்ருேம். முதல்முதலில் தோன்றிய கற்பனை உலகம் இது என்று நாம் கூற இடமிருக்கிறது.

இரண்டாம் பாகத்தில் அரசு புரிகின்றவர்கள் ஞானிகளாய் இருக்கவேண்டும் என்ற விஷயம் ஆராய்ச்சி செய்யப்படுகின்றது. ஞானியின் தன்மை என்ன, ஞானி யார் என்ற வினக்கள் பிறக் கின்றன.

மூன்ரும் பாகத்தில் பலவிதமான அரசியல் அமைப்புக்களைப் பற்றிப் பிளேட்டோ சர்ச்சை செய்கின்ருர். அவர் கண்ட கற்பனை உலகத்தைச் சித்திரிப்போம்.

நகர மாந்தர்களை சாதாரண மனிதர்கள், போர் வீரர்கள், அரசியலைக் காப்பாற்றுகின்ற ஞானிகள் என்று மூன்றுவிதமாய்ப் பிளேட்டோ பிரிக்கின்றார். நம்நாட்டிலும் நான்கு வருணங்களை நாம் பார்க்கின்றோமன்றோ. பார்ப்பனர், க்ஷத்திரியர், வைசியர், நான்காம் வருணத்தவர் என்ற பிரிவுகளை நாம் அமைத்தோம். இந்த நான்கு தன்மைகளும் ஒரே மனிதனிடத்தில் நாம் பார்க்கக் கூடும். அறிவை வளர்க்கிறபொழுது அவன் பார்ப்பனனாய்விடுகின்றான்; போர் உணர்ச்சி எழுகின்ற பொழுது அவன் க்ஷத்திரியனாய்த் திகழ்கின்றான்; வியாபாரத் தொழிலில் இறங்குகின்ற பொழுது அவனே வைசியனாய் வாழ்கின்றான்; பணிவிடை செய்கின்ற பொழுது அவன் நான்காம் வருணத்தைச் சார்ந்தவனாகின்றான். பார்ப்பனன் முகத்திலிருந்து தோன்றினான்; க்ஷத்திரியன் புஜத்திலிருந்து பிறந்தான்; வைசியன் துடையிலிருந்து கிளம்பினான்; நான்காம் வருணத்தவன் காலிலிருந்து வந்தான் என்று வேதங் கூறுகின்றது. ஒன்று தாழ்ந்தது; ஒன்று உயர்ந்தது என்ற தவறான அபிப்பிராயத்தை அது கூறவில்லை. காலில்லாமல் துடை நிற்குமா, துடையில்லாமற் போனால் புஜங்கள் துண்டாய் நிற்கமுடியுமா? புஜங்களில்லாமற் போனால் தலை திகழுமா? எல்லாவற்றையும் தாங்குகிறது நான்காம் வருணந்தான். அடியார்களாய் இருப்பதற்கு நாம் கொடுத்துவைக்கவேண்டுமே! விராட் புருஷனை அவ்வேதம் சித்திரித்தது. அந்தப் புருஷனின் எந்த பாகத்தை நாம் தள்ளமுடியும்? எல்லாம் அவன் உடலாயிற்றே. அவன் உயிரையும் உடலையும் பிரிக்கமுடியுமோ? பிளேட்டோ குடியரசில் ஞானிகளுக்குத்தான் அரசியலில் இடமுண்டு. இவர்களைச் சட்டசபை தேர்ந்தெடுக்கும். பிறகு வம்ச பரம்பரையாக இவர்களுக்கு ஆட்சியுரிமை வரும். கீழ்ச் சாதியிலிருந்தும் மேற் சாதிக்கு மனிதன் வரலாம். மேற்சாதியில் உள்ளவன் நீசச் செயலால் கீழ்ச் சாதிக்குத் தள்ளப்படலாம். விச்வாமித்திரர் க்ஷத்திரியராயிருந்தாலும் தம் தவ வலியால் உயர்ந்த நிலை அடைந்த செய்தியை நாம் அறிகின்றோமன்றோ. பார்ப்பனர்களும் கர்ம சண்டாளர்களாய் விடலாம். நாட்டுச் சட்ட திட்டங்களை இந்த ஞானிகள் நிறைவேற்றவேண்டும். சங்கீதமும், தேகப் பயிற்சியும் வேண்டும், தைரியம், மட்டு மரியாதை இவை போற்றப்படுகின்றன. எந்தப் புத்தகம் படிக்கலாம், எந்தப் புத்தகம் படிக்கக்கூடாதென்ற நிபந்தனை அந்நாட்டிலுண்டு. ஹோமர், ஹெஸியட் இவர்கள் தந்த நூல்களில் தெய்வங்கள் ஒழுங்காய் நடந்துகொள்ளவில்லை.

நம் நாட்டுப் புராணங்களில் தேவேந்திரன் சரியாய் நடந்துகொண்டானா? தெய்வங்களின் நடத்தையைக் காட்டிலும் மனிதனின் நடத்தை பதின்மடங்கு ஒழுங்காயிருக்கக் காண்கின்றோம். ஒழுங்கற்ற தெய்வங்களைச் சித்திரிக்கும் ஹோமருக்குப் பிளேட்டோவின் குடியரசில் இடமில்லை. கயவர்கள் சுகவாழ்வு வாழ்கின்றது, சான்றோர்கள் துன்புறுகிறது இவைகளை விஷயங்களாய் வைத்துக்கொண்டு கற்பனைத் தறியில் நூல்கள் அமைக்கும் கலைஞர்களுக்கு அங்கே ஆதரவில்லை. கவிகளைப் பிளேட்டோ தம் குடியரசிலிருந்து அடித்துத் துரத்திவிட்டார். கவிகள் பொய்யர்கள்; உலகம் நிலையற்றது. இவ்வுலகத்தைப்

பற்றிக் கவி சிந்திக்கிறான். இவ்வுலகம் ஒரு பரம்பொருளின் சாயை; இந்தச் சாயையைப்பற்றிக் கனவு காண்கின்றது மற்றொரு சாயையாகும். அந்தக் கனவின் உரு வேறொரு சாயையாகும். ஆகவே, கவி தரும் சித்திரம் நிழலிலே பிறந்த மற்றொரு நிழலின் வேறொரு நிழலாகும். உண்மைக்கும், கவியின் சித்திரத்திற்கும் மிகத் தூரமாகும் என்று பிளேட்டோ முடிக்கின்றார்.

நாடக ஆசிரியர்களையும் பிளேட்டோ துரத்திவிட்டார். நாடகத்தைப்பற்றிப் பிளேட்டோ கொண்ட கருத்து இங்கு நோக்கத் தருந்தது. நல்லவர்கள் கெட்டவர்கள்போலப் பாவிக்கக்கூடாது. நாடக ஆசிரியர்களும், நடிகர்களும் கயவர்களின் தீச்செயல்களைப் பாவிக்க நேரிடும். பெண்கள், அடிமைகள், கீழ்ச்சாதியைச் சார்ந்தவர்கள்—இவர்களைப்போலநடிப்பதுஉயர்ந்தோர்களுக்கழகன்று.

நாடகத்தில் எல்லாம் உயர்ந்த பாத்திரங்களாய் இருந்துவிட்டால் நடிக்கலாம். அப்படி நிகழ்வது நாடகத்தில் முடியாத காரியம். ஆதலால், நாடகம் என் குடியரசில் இடம் பெறாது என்று முடிக்கின்றார். சங்கீதத்திற்கும் ஒரு நிபந்தனை உண்டு. சோகத்தை எழுப்பக்கூடிய சங்கீதமாய் அது இருக்கக்கூடாது; பொழுதுபோக்காகவும் அது அமையக்கூடாது. லிடியன் (Lydian) சங்கீதம் சோக உணர்ச்சியை எழுப்பும். அது உதவாது. ஐயோனியன் (Ionian) சங்கீதமும் போற்றுதற்குரியதன்று. அது ஒரு பொழுதுபோக்காய் முடியும். டோரியன் (Dorian) சங்கீதம் தைரியத்தையும் வீரக்கனலையும் கிளறும். அத்தகைய சங்கீதத்தைத் தான் நாம் வளர்க்க வேண்டும். மிதத்தையும், வீரத்தையும் உள்ளத்தில் வேரூன்றச் செய்யும் சங்கீதமே சங்கீதம் என்ற தீர்மானத்திற்கு அவர் வந்துவிட்டார். உடலுக்கு அதிகமான சுகத்தை அளிக்கக்கூடாது. மீன் தின்பது தவறாகும். குழம்புகள், நாவுக்கு இன்பத்தைத் தருகின்ற பொருள்கள், இவைகளை விலக்க வேண்டும். ஆகாரத்தில் ஒரு நியமம் இருக்குமாயின், மருத்துவனைத் தேட வேண்டிய அவசியம் எழாது. ஒரு குறிப்பிட்ட வயது அடைவதற்கு முன்பு வாலிபர்கள் அருவருப்பைத் தரக்கூடிய காட்சிகளையோ, கெடுதல்களையோ நோக்கக்கூடாது. தகுந்த காலத்தில் இக்காட்சிகளை அவர்களுக்குக் காண்பிப்பார்கள். அந்தச் சோதனைகளில் அவர்கள் வெற்றி பெற்றால் அவர்களை அரசு புரியத் தேர்ந்தெடுப்பார்கள்.

தக்க வயது வராத இளைஞர்கள் போர்க் காட்சியைப் பார்க்கலாம். ஆனால், போரில் அவர்கள் கலந்துகொள்ளக்கூடாது. கல்வித்துறையில் இவர் கண்டது இத்தகைய பயிற்சிதான்.

பொருளாதார சம்பந்தமான விஷயங்களைக் கவனிப்போம். நாட்டைக் காப்பாற்றுகிறவர்கள் சிறிய இல்லங்களில்தான் வசிக்க வேண்டும். எளிய உணவே அவர்களுக்கு அளிக்கப்படும். தற்காலத்து அமைச்சர்கள்போலச் சுகவாழ்வு நடத்த முடியாது. எளிய வாழ்க்கை நடத்தினார்கள்; ஆனால், சிறந்த அறிவாளிகளாய்த் திகழ்ந்தனர். இப்பொழுதோ ஆடம்பரமான வாழ்க்கையைப் பற்றுகின்றனர். ஆனால், அறிவிலே ஒரு சூன்னியத்தை—ஒரு அமாவாசை இருட்டைப்—பார்க்கின்றோம். (தொடரும்)

காவிதாசர் கனவு

8, உமாப்ரஸாதம்— குமாரஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

ரதி பிரலாபம்

பரமேசுவரனுடைய கோபக்கனலால் மன்மதன் எரிந்து சாம்பலாகப் போனதைக் கண்கூடாகக் கண்ட மன்மதன் மனைவி ரதிதேவி தாங்கமுடியாத துயரத்தால் மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். வெகு நேரம் கழித்து உணர்ச்சியைத் திரும்பி அடைந்த பொழுது அழுது புரண்டு புலம்பத் தொடங்கினள்: "ஐயோ! என் கணவர் போய்விட்டாரே! அழகிலும் அன்பிலும் ஒப்புயர்வற்ற அவர் போய் நான் உயிருடன் இருக்கலாமா? எப்படி என்னைத் தனித்துவிட்டுச் சென்றீர்? பாலத்தை உடைத்து ஓடிப்போன வெள்ளம் தாமரைப் பூவை திடலில் தள்ளிவிட்டுப் போவதுபோல் போய்விட்டீரே. உமக்கு வெறுப்பான செய்கை ஒன்றையும் நான் செய்யவில்லையே. அப்படி ஏதாவது நான் செய்தேனா? நான் உங்கள் இதயத்தில் எப்பொழுதும் இருப்பதாக நீங்கள் கூறியிருக்கின்றீர்களே. அது உண்மையாக இருந்தால் உங்கள் உடல் எரிந்து போனபொழுது நானும் அழிந்து போயிருக்கவேணுமே! நான் உடன்கட்டை ஏறித் தாமதமின்றி வருவேன். உங்கள் மறைவால் உலக இன்பமே மறைந்துவிட்டதே. இளம் பெண்கள் உங்களுடைய உதவியை இழந்துவிட்டதால் காதலர்களைக் கண்டு அடைந்து களிக்கமாட்டார்கள். அவர்களுடைய அழகும் மயக்கத்தைக் கொடுக்கும் லீலைகளும் இனிப் பயனற்றவைகளே. சந்திரனும் வளர்பிறையாக வளர்ந்து பூர்ணப்பொலிவுடன் ஒளி வீசுவதை விரும்பமாட்டான். சிவப்பும் பச்சை நிறமும் அழகாகக் கலந்து கண்ணைக் கவரும் மாந்தளிரை யார் அம்பாக எய்வார்கள்? குயிலுடைய வாழ்க்கைக்கு இனி என்ன பயன்? உம்முடைய நாணாக விளங்கும் வண்டுகள் என்னைப்போல் துன்பத்தால் வாடி அழுது கொண்டிருக்கின்றன. நீர் மறுபடியும் எழுந்து பெண் குயிலைக் காதலர்களுக்கு இன்பத்தையளிக்கத் தோழியாக அனுப்பக் கூடாதா? வசந்த காலமும் திங்களுடைய ஒளியும் இனிப் பயனற்றனவே. உம்முடைய தோழன் வசந்தன் உம்மை விட்டுப்பிரிந்து எங்கே போய்விட்டான். எந்தத் தீ உம்மை அழித்ததோ அது அவனையும் அழித்து விட்டதா? அந்தத் தீயின் வழியாகவே நான் உம்மை வந்தடைவேன்! 'மன்மதனை விட்டுப் பிரிந்து ரதி உயிர் வாழ்ந்திருக்கிறாள்' என்ற கொடுமையான சொல்லை நான் கேட்கக்கூடாது. உம்முடைய சவத்திற்கு அலங்காரம் செய்து சடங்குகளை நடத்தும் பாக்யமற்றவள். நான் இனி ஒரு கணம்கூட உயிர் வாழமாட்டேன். நானும் உயிரைத்

துறந்து உம்மை உடனே அடைவேன்'' என்று பலவிதமாகப் புலம்பினாள்.

இதையெல்லாம் கேட்ட வசந்தன் ஓடோடி வந்து அவளைத் தேற்றினான். அவனைக் கண்டவுடன் அவளுடைய துயரம் எல்லை கடந்து உச்சநிலையை யடைந்தது. தன் இரு கைகளாலும் மார்பில் அடித்துக்கொண்டு ஓவென்று அலறினாள். சுற்றத்தார்கள் நண்பர்களைக் கண்ணுற்றவுடன் துயரம் பெருவெள்ள மாகப் பெருகி மடையையே அடித்துக்கொண்டு போவதுபோல் ஏற்படுவது இயற்கையல்லவா? மறுபடியும் புலம்பினாள்:''வசந்தா! உன் உயிர்த் தோழனுடையசாம்பற் பொடிகள் இப்படிக் காற்றில் பறந்துபோகலாமா?......நாதா! ஆடவர்கள் மனைவிகளிடத்தில் வெறுப்புக் கொண்டாலும் நண்பர்களைக் கண்டால் உற்சாக மடைவார்களல்லவா? நாதா! இந்த உயிர் போன்ற நண்பன் உலகத்தை எல்லாம் உங்கள் மலர்க்கணைக்கு வசமாகச் செய்ய வில்லையா?...நண்பனே! காற்றால் அணைந்த விளக்குப்போல என் நாதன் போய்விட்டாரே, அந்த விளக்கில் உள்ள ஒளியற்ற திரிபோல நான் எதற்காக இருக்கவேணும்? ஒரு காட்டிலுள்ள மதயானை காட்டிலுள்ள பெரிய மரத்தை முறித்துக் கீழே சாய்த்த பிறகு அந்த மரத்தையே நம்பிச் சுற்றித்தழுவிக்கொண்டிருக்கும் கொடி துவண்டு கீழே விழுந்து வாடி உலர்ந்து அழிந்து விடு மல்லவா? நீ உடனே தீயை மூட்டி அத்தீயின் வாயிலாக நான் என் நாதனை அடைவதற்கு உதவி செய்யும்படி வேண்டுகிறேன். சந்திரன் மறைந்தால் சந்திரிகை தனித்து இருக்குமா? மேகம் மறைந்தால் மின்னல் தனித்து மின்னுமா? என் நாதனுடைய சாம்பலைத் தழுவித் தீயில் தளிர் மெத்தையில் படுத்துக் கொள்வதுபோல் படுத்துக்கொள்வேன். நீ எங்களிருவருக்கும் பல சமயங்களில் மலர்ப் படுக்கையை அளிக்கவில்லையா? இப்பொழுது விறகுகளைப் படுக்கையாக அடுக்கித் தீயை மூட்டிவிடு. தென்றல் காற்றால் தீயை நன்கு ஜ்வலிக்கும்படிச் செய். எங்கள் இருவருக்கும் நீயே தர்ப்பணச் சடங்குகளைச் செய்யவேணும். மாந்தளிர்களைப் பிண்டமாக அர்ப்பணிக்க வேணும்''.

இப்படி அவள் புலம்பியபொழுது ஆகாசவாணி அவளைத் தேற்றி அறிவித்தது: ''ரதிதேவி! நீ உயிரைத் தியாகம் செய்யும் எண்ணத்தை விட்டுவிடு; பரமசிவன் பார்வதி தேவியை மணக்கப் போகிறார். அப்பொழுது அவர் உன் நாதனுக்கு உயிரை யளித்து உனக்குமாங்கல்யப்பிச்சை யளிப்பார். கண்ணைக் குத்தின தெய்வம் கண்ணைக் கொடுக்கும். மேகத்திலிருந்து இடியும் விழும், மழையும் சொரியுமல்லவா? கோடையில் ஆற்றைவற்ற அடித்த கதிரவன் மழை காலத்தில் ஆறு இருகரைகளும் புரண்டு தண்ணீர் ஓடச் செய்கிறான் அல்லவா?'' இதைக் கேட்டும் வசந்தனாலும் தேறப் பெற்றும் ரதிதேவியின் உள்ளம் மிகுந்த அமைதியை அடைந்தது.

(தொடரும்)

ஆன்ம தத்துவம் (ஆன்மாவின் இயல்பு)

பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்,
முன்னைத்தலைமைத் தமிழ் ஆசிரியை,
சென்னை லேடிவில்லிங்டன் உயர்தரக் கலாசாலை.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அவ :— இங்ஙனம் ஆன்மா பலவாருயிருக்க, அஃது ஒன்றே எனச் சொல்பவர் கூற்றை எடுத்தியம்புகிருர்:

மூலம் : **49.** சிலர் ஆத்ம பேதமில்லை; ஏகாத்மாவே உள்ளதென்ருர்கள்.

பொருள் : "சிலர் ஆன்மாவிற்குள் வேறுபாடில்லை. ஓரான்மாவே உள்ளது" என்கிருர்கள். இங்ஙனம் கூறுகின்றவர் கருத்தைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தோன்ற, அவரைச் 'சிலர்' என்கின்றனர்.

விளக்கம் : சிலர், "முக்திதசையில் சீவான்மாவும் பரமான்மாவும் ஒன்று" எனச் சொல்லுகின்றனர், ஆனல் அங்ஙனமில்லை, அப்போதும் சீவான்மாவிற்கும் பரமான்மாவிற்கும் வேறுபாடு உண்டு. சீவன் அணுப்பொருள். பகவான் எங்கும் பரந்த பொருள். இம்முறையில் இவரிருவருக்கும் ஐக்கியம் உண்டாதல் யாங்ஙனம்?

இன்னும் மோட்ச தசையில் ஆன்மாவிற்கும் பிரம்மத்தோடு ஒப்பு உண்டு. ஆனல், எல்லா வகையிலுமன்று. பகவான் எங்ஙனம் எல்லாவற்றையும் அறிகின்ருனே, அங்ஙனமே மோட்ச நிலையில் ஞானவிளக்கத்தைப் பெற்ற சீவனும் எல்லாவற்றையும் அறிகின்ருன். இவ்விஷயத்தில் இருவர் இயல்பும் ஒரு தன்மைப் பட்டுள்ளது. இதனுலேயே, பகவானுக்குள்ள சிறப்புகள் யாவும் சீவனுக்குண்டு எனச் செப்புதற்கியலாது.

அவ : மேற்கூறிய கூற்றுப் பொருத்தமற்றதெனக் கண்டிக்கிருர்:

மூலம் : **50.** அந்தப் பக்ஷத்தில், ஒருவன் ஸுகிக்கிற காலத்திலே வேறே ஒருவன் துக்கிக்கக் கூடாது.

பொருள் : ஆன்மபேதமில்லை எனச் சொல்லும் பக்ஷத்தில், ஒருவன் இன்பந்துய்க்குங் காலத்தில் மற்ருெருவன் துன்பத்தில் துவளுதல் கூடாது.

விளக்கம் : ஆன்மாவில் வேறுபாடு இன்றெனின், இன்ப துன்பங்கள் இரண்டும் ஒன்றையே பற்றியிருக்குமாதலின், இவை இரண்டும் ஒருவனுக்கே ஒரு காலத்தில் உண்டாதல் வேண்டும். அநுபவத்தில் இங்ஙனம் காண்கிலோம். ஓர் ஆன்மாவே இன்ப துன்பங்களைத் துய்ப்பினும், அஃது ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்றை அநுபவிக்கிறதேயன்றி, இரண்டையும் ஏககாலத்தில் துய்த்தல் இல்லை. இன்னும் ஓரான்மா முத்தியடைந்தால் மற்ற ஆன்மாக்கள் எல்லாம் முத்தியடைதலுமில்லை. ஆதலின், ஆன்ம

பேதம் உண்டு என்பதை ஒப்புக்கொள்வது இன்றியமையாத தாகும்.

அவ: "இன்ப துன்பங்களாகிற நிலைக்குக் காரணம் உடலின் பேதமே" எனச் சிலர் சொல்லும் யுக்தியைச் சொல்லுகிறுர்:

மூலம்: 51. அது தேஹ பேதத்தாலே என்னில்,

பொருள்: அவ்வின்ப துன்பங்கள் உடலின் பேதத்தால் உண்டாவதென்னில்,

விளக்கம்: ஆகாயம் ஒன்று; அவயவமற்றது; என்றுமுள்ளது; எங்குமுள்ளது என்பது சிலர் கொள்கை. இங்ஙனம் இஃது ஒன்ருயிருப்பினும், நான்கு சுவருக்குட்பட்ட ஆகாயத்தை மடாகாசம் என்றும், குடத்திற்குட்பட்ட ஆகாயத்தைக் கடாகாசம் என்றும், மடத்தையும் குடத்தையும் இட்டு வேறுபடுத்திக் கூறுகின்ருேமல்லவா? அவ்வாறே ஆன்மா ஒன்ருயும் அவயவமற்ற தாயும் என்றும் எங்கும் உள்ளதாயும் இருப்பினும், அந்தந்தச் சரீரத் தொடர்பையிட்டு, அந்தச் சிவன், இந்தச் சிவன் 'என்றும் அத்துன்பத்தை அனுபவிப்பவன் அவன், இவ்வின்பத்தை அனுபவிப்பவன் இவன் என்றும் கொள்வதில் குற்றம் என்னே?

அவ: அது பொருந்தாது என்பதற்குச் சில உதாரணங்களைக் காட்டுகிருர்:

மூலம்: 52. ஸௌபரி சரீரத்திலும் அது காணவேணும்.

பொருள்: உடலின வேறுபாடே இன்ப துன்பங்கட்குக் காரணமென்னில், பல சரீரங்களைக்கொண்ட ஸௌபரி உடலிலும் அந்த நியமம் காணப்படல் வேண்டும்.

விளக்கம்: அவர் இன்பந் துய்க்க வேண்டுமெனவே பல சரீரங்களை எடுத்து, ஒரேகாலத்தில் அதைத் துய்த்தார் என்பது சொல்லப்படுகிறது. ஆதலின், சரீர பேதம் இன்ப துன்பங்கட்குக் காரணம் எனச் சொல்லுதற்கில்லை.

அவ: ஒருவன் சிஷ்யன், ஒருவன் ஆசாரியன் என்னும் நிலைகளும் பொருந்தமாட்டா என்கிருர்:

மூலம்: 53. ஒருவன் ஸம்ஸரிக்கையும், ஒருவன் முக்தனுகையும், ஒருவன் சிஷ்யனுகையும், ஒருவன் ஆசார்யனுகையும் கூடாது.

பொருள்: ஆன்மா ஒன்றேயானல், ஒருவன் சமுசாரத்தில் பிணைக்கப்பட்டு இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருத்தலும், மற்றொருவன் அச்சமுசாரக்கட்டிலிருந்து விடுபட்டு முக்தனுய் இன்பங்களைத் துய்த்துக்கொண்டிருத்தலும், ஒருவன் சிஷ்யனுய் ஆசாரியனிடம் போந்து உபதேசத்தைப் பெறலும், மற்றொருவன் ஆசாரியனுயிருந்து தன்னை அடைந்தவனுக்குப் போதித்தலும் கூடாதென்கை.

அவ: இன்னமும் இதை வேறொரு முறைகொண்டு விளக்குகிருர்:

(தொடரும்)

இசைப் பகுதி

ராகம்: சங்கராபரணம்

பல்

1 ,, ப ப — ம க ம ர் — ப ப ம க — க ம ப ப
.. நி தி — யி . னைப் — ப வ ள . — . த்தூ . ,
2 ரி க ம ப — பபமகமாமா — ,, — க.ாமா த ம ப
லா ர் நி தி — யி . . . னே . — ,, — ,. த்தூ . .
3 ,, — ,, — ,, — ,,
4 ரி க ம க — மாமாமதபம — க ரி கா ம க ரீ — ஸ நிரிஸ தாநீ
லா ர் க தி — யி . . .னே . . . — க்க ஞ் . ச ன் — மா . . . .
5 ரி க ம க — ,, — ,, — ,,
ஞு ம் க தி —
6 ,, — ,, — ,, — ,,

7 பமகரிகாமா—ப<u>தநிஸ்நி</u>தபபா— த ப ம க கா மக — ரி ஸ த நி
ஞு. ம் , . க தி—யி. . . . . .னே.— க்க ஞ் ச ன் . — மா .

மத்யம

பமகரிகாமா — தா பா கா மா — பா மா ரீ கா — மா கா ரீ கா
ஞும் . . ம தி —யினே மா லை — வாழ்த்தி வ ண — ங்கி என் மன
ரீ ; க ம ப :
னேன் . நி தி :

அநு

,, த் த் — த த தப — பா பா ப த நீ — தாஸ் நி பா ம
. . பா — . யி ரு ம் — ப ர வை . . — . த ன் னு ள்
ஸ் ஸ் நி ஸ் — ஸ் ரி ரி ஸ் — ஸ்ா ஸ் நி ஸ் ரி கா — ரீமக ஸ்ா ஸ்ப
. . க் கா — . யி ரு ந் — த மு . த ம் . — . கொ ண் ட

சிட்ட

ரீ க ம ப ா ; — க ம ா க — ம ப ம க — ரி ம க ரி
. . . மூ — வ ரி ல் மு — த ல் வ ஞு ம — ஒ ரு வ னை
ம ப த ப — ஸ் ஸ் நி ரி — ரி ஸ் ம க — ரி ஸ் த ரி
குருமணித் — தி ர னை இ — ன் ப ப் ப ா — வினைப்பச்சைத்
ரி க — ம ப :
னே. — நி தி:

சர

ஸாஸாபமபா— ப ப ம ப — த ; பா ; ம க — ரி க ம ப
முன்.பொ.லா— . . இ . — ரா வ ண ன் — த ன் மு ழு
பாபாஸ்ாஸ்நி— த த ப த — நி ; த ; பா — ம ப த நி
அன் பி ஞு .— ல் அ நு — ம ன் வ ந் து — ஆ ங் க டி
த த த த — த த ப ப — ப தநீ தா ஸ் நி — தபாமக மா ரி
என் பெலா — . ம டு ரு — கி . . . யு க் — கி . . ட்டு . . .
நி ஸ் ரி ரி — ரி ரி ஸ் நி — ஸ் ரி கா ரி ம க — ஸ் ப த நி
அன் பி ஞு — . ல் ஞு ா — ண . . நீ — . ர் கொ ண்

தாண்டகம்

ஏ. ராஜம்மாள்.
தாளம் : ஆதி

லவி

ப ம ப ப — ப ப ம க ம ப ப ம — காமபமாகஸ ||
ஊ . . . — . . நெறி மை மா ல் — நிஊய.வல். . ||
டி — பா பா ரீ க ரி க ம ம ம — தபபமகாகஸ ||
டி — . நெறி மை மா ல் — நிஊய.வல்.. ||
டி — ப ப க ம ப தா ம — ப ம க ஸ ||
டி — . . நெறி மை யா ல் நி — ஊ ய வ ல் ||
ஸ ஸ ஸ ஸ — ஸ்ாஸா ஸாமக மாபாபா ப ம — காமபகாஸா ||
ள . . . — . . . . கண் டு . . முன் — அண்டமா. ||
டி — ஸாஸாபமபா ஸ்ாஸ்நிபபாம— டி ||
டி — கண் . . . டு . முன் —
— டி க ரி ஸ் நி ரிஸ்நிதஸ்நிதப— மமமதபபமக ||
டி — டி க ண் . . டு . . . முன் . .— அண்டமா .. ||
டி — டி ரி ஸ் ம க ரிஸ்ஸ்நிரிஸ்நித- டி ||
டி — டி கண் . . . டுமுன். . . .— டி ||

காலம்

ஸா ரீ ரீ ப ம — காஸா ஸா ஸா ஸாஸா ஸ்; நி — ப ; ம க ;ஸ ||
த்துவந்தவிதி— யிஊ . . . .க்கண்டு--கொண்டதொண்ட

பல்லவி

க மா ரி மா கா — மா மா பா பா த நி ஸ் த — நி நி ஸ் ஸ் ||
. . . . ப ரு — வ . ரை . தி ரி த் து . — வா ே ஞ ர் ||
த நி ஸ் ஸ் — ஸ்ாஸ்நி பா பா பாபம மா மா — மதபமகாஸா ||
. . அ ப் — . . ப . ஊ . . எம்பி . . — ரா . .ஊ. . ||

ஸ்வரம்

ஸ ரி நி ஸ — , நி ஸ க ரி கா ஸ — ரி க ம ப ||
உலகம் கொ — ண் ட கோ . வி ஊ க்கு — டர்தைமேய ||
ஸ் ா ஸ் ா — ஸ் நி த ப ம த ப ப — ம க ரி ஸ ||
தே ஊ ப் — பைம்பொன்ஊ அமரர்சென் — னிப்பூ. வி ||

ணம்

த மா ப — கா ம ரி ; க ஸா — ஸ ரி க ம ||
ம தி ளி — லங்கை . . வே . . — வி . த்து ||
ஸ் தா நி — பா த ம , ப கா — ஸ ரி க ம ||
யி ஊ ப — ணி. ய நின் . ரு : . — ர் க் கு ||
ம க ம ம — ப ப ம ப த ரி ஸ் த — நி நி ஸ் ஸ் ||
எ ன் று . — டை . நெ ஞ் ச . . . — மென்றும் ||
ஸ்ாஸ்ாஸ்ாஸ்நி-- பா பா பா ப ம மா மா த ப ம— கா ஸ ரி க ||
டா . ட் டு ,— வன். . அ . . ய . . , — னே , னே, ||

மாயக் கிளி

"என் உயிர் இருக்கும் கோட்டைக்கு ஏழு ப்ரம்மாண்டமான தங்கக் கதவுகள் போட்ட வாயில்கள். ஒவ்வொரு வாயிலிலும் அனேக ராக்ஷஸர்கள், பேய்கள், க்ரூரம்ருகங்கள் காவல் இருக்கிறார்கள். ஒரு ப்ராணிகூட அணுகமுடியாது. இத்தனையும் ஜெயித்துக்கொண்டு உள்ளே போனால் ஏழாவது கதவும் திறந்ததும் அங்கு தங்கக் கிளிக்கூண்டு இருக்கிறது.... அதில் ஒரு அழகான கிளி இருக்கும், அதன் மென்னியைப் பிடித்தால் போதும்—என் உயிர் பறந்து விடும்!"...என்றான். உண்மையில் நடுங்குவதுபோல் இந்திரா, சந்திரா, ஐயையோ வேண்டாம்! எந்த விரோதியும் வந்து உங்கள் உயிரை வாங்க வேண்டாம். எங்கள் க்ஷேமத்திற்காக அந்தக் குகைக்கு இன்னும் காவலைப் பலப்படுத்துங்கள். அதுவே எங்களுக்குப் போதும்" என்று கெஞ்சிக்கெஞ்சி அரக்கனைப் பரிபூரண பித்தனாய்ச்செய்தார்கள். ராக்ஷஸன் நெடுநேரம் அங்குத்தங்கி மறுநாள் முதல் அவர்கள் பூசைக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்து கொடுத்துவிட்டுச் சென்றான். மறுநாளையே எதிர்பார்த்த இளவரசிகள், இரவுபூராவும் தூக்கம் பிடிக்காது தவித்தார்கள். இருவர் உள்ளங்களும் சாருகேசனையே எதிர்பார்த்துத் தவித்தன.

குறித்த நேரத்தில் சாருகேசன் வந்து சேர்ந்தான். இருவரும் நடந்த விஷயம் பூராவும் கொட்டி அளந்தார்கள். சாருகேசனும் அபரிமிதமான ஆனந்தத்துடன் ரிஷியிடம் சொல்லப் பறந்தான். சகலமும் கேட்ட ரிஷி வெற்றிக் கொடியைத் தாங்கியவாறு மும்முரமாய்க் காரியத்தில் இறங்கினார். அரக்கர்களை யெல்லாம் முறியடிக்கும்படி சக்தியைப்பெற யோகத்தில் ஆழ்ந்தார். ஒரு வாரத்திற்குப் பிறகுதான் ரிஷி நிஷ்டையில் இருந்து எழுந்தார். பிறகு, மறுநாளே சாருகேசனுடன் அந்தக்காட்டுக்குப் புறப்பட்டார். இருவரும் அரக்கர்களின் கண்களில் படாதவாறு மாறு வேஷத்தில் இரண்டு கிளிகளின் ரூபத்தில் சென்றார்கள்.

இருவரும் போட்ட திட்டப்படி தங்கக் குகையைக் கண்டு பிடித்து எதிர் மரத்தில் வாசம் செய்யத் துடங்கினார்கள். அங்குக் காவல் இருக்கும் அரக்கர்களை சுலபத்தில் வெல்ல முடியாதுபோல் தோன்றியது. ரிஷியாய் இருப்பினும், கடவுளைத் துதித்துவிட்டுச் சாருகேசனை, "நான் ஜாடை காட்டும் சமயம் நீ அந்த எதிர் மரத்தில் ராக்ஷஸர்கள் கண்களில் படும்படி உட்கார். அவர்கள் உன்னைக் கவனித்துப் பிடிக்க வரும் சமயம் பறந்துபறந்து அவர்களை இந்த இடத்திலிருந்து ரொம்பதூரம் அலையவைத்து இழுத்துப்போய் விடு,

என் மந்திர சக்தியால் அரக்கர்கள் மயங்கிக் கீழேவிழுந்த பிறகு நீ இங்குவா.........அதுவரை அவர்களை இந்தப்பக்கம் வாராதபடி பார்த்துக்கொள். என் யோகத்தின் பலனால் உனக்கு ஒரு ஆபத்தும் வராது, ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தார்.

பிறகு பலவித மந்திரங்களை ஜபிக்கத் துடங்கினார். அதன் பலன் எல்லா அரக்கர்களின் கண்களும் ப்ரமை தட்டத் துடங்கின. அவர்கள் கண்களுக்கு ஏழு தங்கக் கதவுகளும் திறந்து கிடப்பதாகவும், கிளி பறந்து வருவதைப்போலும் தோற்றம் தெரியும்படி மந்திரதந்திரங்களை ஏவினார். அதன் பலன் ப்ரமிப்பால் ராக்ஷஸர்கள் கலவரத்துடன் நாலாபுறமும் அலைந்து குழம்பினார்கள். சமிஜ்ஞை அறிந்த சாருகேசன் குருவின் உத்தரவுப்போல் அவர்கள் எதிரில் தோன்றினான். அவ்வளவுதான்!...எல்லோரும் ஒரே முகமாய்க் கூடித் தங்கள் யஜமானனின் உயிர்க்கிளியே பறப்பதாய் நினைத்துச் சகலரும் துரத்தத் துடங்கினார்கள். கிளி தன் சக்திகொண்டவரை வேகமாய்ப் பறந்து நெடுந்தூரம் போய்விட்டது. ராக்ஷஸப் படை அதன் பின்னே துடர்ந்து சென்றது.

குரு அதி சாமர்த்யமாய் க்ரூர ம்ருகங்களை ஸம்ஹாரம் செய்தவாறு ஒவ்வொரு கதவாய்த் திறந்துகொண்டு உள்ளே முன்னேறிக்கொண்டே இருந்தார். அருகே செல்லச் செல்ல பயமும் சந்தோஷமும் சேர்ந்து வாட்டியது. ஏழாவது கதவையும் திறந்தார் அங்கு கோரஸ்ரூபமாக ஒருப்ரம்மாண்ட ராக்ஷசன் சீறியவாறு தன் கோரைப் பற்களைத் தீட்டிக் கொண்டு கிளம்பினான். ரிஷியும் தன் சாமர்த்தியம் பூராவும் உபயோகித்துச் சண்டை செய்தார். கடைசியில் மந்திர வேலை உபயோகித்து ராக்ஷஸனைக்கொன்று வீழ்த்தினார்.

ரிஷி ஜாக்ரதையுடன் கிளியை நெருங்கினார். மெள்ளக் கதவைத் திறந்து நடுங்கும் கைகளுடன் அதன் மென்னியை அழுத்திப் பிடித்தார்.

ராக்ஷஸன் இளவரசிகளிடம் குஷியாய்க் குலாவுவதற்காக ஆர்ப்பாட்டத்துடன் அவர்கள் அறையை அடைந்தான். உள்ளே வந்து உட்கார்ந்த உடனே அவனை அறியாது உடல் நடுங்கியது. "தடார்" என்று ஆசனத்தில் உட்கார்ந்தான். கண்கள் திறக்க மறுத்துச் சொருகத் துடங்கின. வாய் அடைத்து விட்டது. திடீர் என்று இவன் சேஷ்டையைக் கண்ட இளவரசிகள் பதறியவாறு ஒன்றும் புரியாது விழித்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் ராக்ஷசன் நாக்கு வெளியே நீண்டது. மூச்சுத் திணறி வெட்டிச்சாய்த்தமரம்

183192

போல் கீழே சாய்ந்தான். 'ஓ!.........சாருகேசனும் ரிஷியும் கிளியைக் கொன்று இருப்பார்கள். அதுதான் ராக்ஷஸன் மடிந்து போனான்'' என்று சந்தோஷம் பொங்க வெளியே ஓடிவந்தார்கள். அங்குக் காவலிருக்கும் ஒவ்வொரு அரக்கனும் துவண்டு கிடந்தான்.

வெற்றி முழக்கத்துடன் ரிஷியும் சாருகேசனும் இளவரசிகளிடம் வந்தார்கள். உடனே, அங்கு இருக்கும் இடம் பூராவும் சோதனைபோடத் துடங்கினார்கள். இந்திரா, சந்திரா தங்களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் பேசவும் மறந்து அவர்கள் பின்னாலே குகைபூராவும் சுற்றினார்கள். இவர்களைத் தவிர அனேக ராஜகுமாரிகள் சிறையில் இருப்பதைப் பார்த்த எல்லோரும் ப்ரமித்து அவர்கள் எல்லோரையும் விடுதலை செய்தார்கள். ஒவ்வொரு இளவரசியும் நடந்ததைப் பூராவும் எடுத்துச் சொல்ல அவர்களைச் சமாதானம் செய்தார்கள்.

உடனே, எல்லா ராஜகுமாரிகளுடன் தங்கள் தாய்நாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள். எதிர்பாராதவிதம் அந்த நாட்டுக்கே புத்ரப்ராப்தி ஏற்படும்படி செய்த ரிஷியும் சாருகேசனும் இளவரசிகளும் கூட இன்னும் பலநாட்டு இளவரசிகளுடன் வருவதைப் பார்த்த ப்ரஜைகளும், சேனைகளும் ஆனந்தக்கூத்து ஆடியவாறு அரண்மனையை நோக்கி அரசனுக்குச் சுபசூசிகையைத் தெரிவிக்க ஓடினார்கள்.

கண் இழந்தவன் கண்ணைப் பெற்றால் எவ்வளவு சந்தோஷப்படுவானோ அதுபோல் ராஜதம்பதிகள் ஆனந்தக் கண்ணீர் பெருக ஓடி வந்தார்கள்; இந்திரா, சந்திரா ஓடி வந்து தாய்தந்தையரை அணைந்துகொண்டு சிறு குழந்தைகளைப்போல் கதறி விட்டார்கள்.

எல்லோரும் நடந்த விவரம் பூராவும் கதைகேட்பதைப் போல் கேட்டுப் பூரித்து எல்லோரும் ரிஷியின் பாதங்களில் சாய்ந்தார்கள்.

குரு சமாதானமாய், "ப்ரபோ! நீங்கள் கோமாதாவை மறந்ததின் பலன் நீங்கள் குழந்தைகளை மறக்கும்படி ஆட்டி வைத்தது. நீங்கள் தப்பை உணர்ந்து திரும்பவும் பூஜை தொடங்கவே, மனம் இரங்கி உங்கள் ரத்தினங்களை உங்களிடம் சேர்க்கும்படி என்னிடம் உத்தரவு இட்டார். இதற்குச் சாருகேசன்தான் காரணம்; அவனுக்குத்தான் சகல பெருமையும்'' என்று அவனைத் தட்டிக் கொடுத்தார்.

இதைக்கேட்ட அரசன் ஆச்சரியத்துடன் சாருகேசனை அணைத்து, "அப்பா! நீ செய்த உதவிக்கு இந்த உலகமே உனக்கு அளித்தால்கூட ஈடாகாது. என் கண்மணிகளைத் தேடி எடுத்ததற்காக அவர்களையே உனக்குப் பரிசாக அளித்து விடுகிறேன்!" என்று சொல்லி, இந்திரா, சந்திரா கைகளைப் பிடித்து சாருகேசனின் கைகளில் ஒப்படைத்தான். மூவரும் மஹரிஷியின் பாதங்களில் நமஸ்கரித்தார்கள். ப்ரஜைகள் பூராவும் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். ராஜா, ராணி, மஹரிஷி ப்ரஜைகள் இவர்கள் கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கின.

சுபம். மங்களம்.

உதிர்ந்த மலர்கள்

★

1—வருஷக்கணக்காகச் சந்தோஷப்பட்டாலும் அதன் நீடிப்பும் அதைப்பற்றிய சிந்தனையும் மக்களுக்குத் தெரிவதே இல்லை. ஆனால் க்ஷணப்பொழுது கவலைக்கண்ணீர், கஷ்டம் இவைகளை அனுபவித்தால்கூட அது மலையளவாகவே தோன்றுகிறது! இதுதான் மனித இயற்கையின் நியதிபோலும்!

2—வருஷக்கணக்காகத் தூங்கியும், விழித்தும், உழைத்தும் உள்ள மனிதருக்கு உடல் நோய்வாய்ப்பட்ட காலத்தில் சில இரவுகள் தூங்காத நிலை—உண்ணாத—உழைக்காத நிலைதான்—மலைபோல் தோன்றி இப்படியேதான் காலம் முற்றிலும் இருப்பதுபோல் தோன்றிக் கலங்கச் செய்கிறது.

3—ப்ரதிதினமும் வேளாவேளைக்குச் சரியானபடி சாப்பிடும்போது சாப்பாட்டின் அஜீர்ணத்தைப்பற்றி நினைப்பதே இல்லை. அல்லது சாப்பாட்டின் செலவைப்பற்றி—தயாரிக்கும் ச்ரமத்தைப்பற்றி—சிந்திப்பதே இல்லை. ஏதாவதொரு முக்கியமான சந்தர்ப்பங்களில் சாப்பாடு இவர்கள் எதிர்பார்க்கிறபடி கிடைக்காவிடிலோ—அல்லது—தாமதமாய்க் கிடைத்தாலோ, அன்றி, கொஞ்சமாய்க்கிடைக்கும்போதோ தாம் முழு த்ருப்தியுடன் சாப்பிடாத பரிபவம் பூரண பட்டினி கிடப்பதுபோலவே தோன்றி, அதைச் சொல்லவும் துணிகிறார்கள்.

4—உழைக்கத் திறமையற்றவர்கள் பெரிய நிர்வாகத்தைப் பற்றிக் கனவில்கூட நினைக்கக்கூடாது. அத்தகையோர் எசகுபிசகாய் ஏதாவதொரு வேலையில் ஈடுபடும்படியாகி விட்டால் தோல்விக்குத் தியங்குவதில்லை. பிறருக்கு எச்சாகவும் முடிகிறது.

5—திடசித்தத்துடன் உள்ளவர்கள் எத்தகைய கடினமான சம்பவங்களையும் தாங்கிக்கொள்ள முடிகிறது. திடசித்தமில்லாது—ஆசை மட்டும் இருந்துவிட்டால் காரியத்தில் வெற்றியே காண்பதில்லை. ஆசைக்கு முன்பு திடசித்தத்தையும் லக்ஷியக் குறிக்கோளையும் உறுதியாகக் கொண்டுவிட்டால் போதும்.

6—வேதாந்தமாகப் பேசத் தெரியாதவர்களே இருக்க முடியாது. ஆனால் அந்த வேதாந்தம் தம் தம் வாழ்க்கையில் சோதனையுற்ற காலத்திலோ அல்லது வேதாந்தத்தை உணர வேண்டிய சம்பவத்திலோ பலிக்கிறதா என்றால் நூற்றுக்கு 99 இல்லை என்றே சொல்லலாம்.

7—கரை காணாத பெருங்கடலையே தன்னுள் தாங்கியுள்ள உலக விசித்திரத்தை ஒரு அளவு வைத்துக் கூற முடியுமா? முடியவே முடியாது. அதற்கும் மேற்பட்டதாகவே இருக்கிறது ஒரு சிறு துரும்புக்குச் சமானமான மனத்தின் விசித்திரம்.

8—இசைக்குக் கட்டுப்படாதவர்களும், இச்சைக்கு வயப்படாதவர்களும் உலகில் உண்டா என்றால் உண்டு. அவர்கள் தான் தாமரைஇலை நீர்த்துளி போன்ற மகான்களாகும்.

—வை. மு. கோ.

பக்தன் அணா 6.

மலர் 5. இதழ் 3. மன்மத ஹு ஆனி மீ. ஜூன்—ஜூலை '55

பொருளடக்கம்

	பக்கம்		பக்கம்
சிக்கதேவராஜ விண்ணப்பம்	199	ஸ்ரீ சங்கர விஜயம்	229
பெரியாழ்வார்—இபாங்கும் பரிவு	205	ஊடல் நாடகம்	233
அமலனாதிபிரான்	215	ஸங்கல்பமும் ஸந்த்யாகாலமும்	237
பக்தி	222	ராமாயணப் படிப்பினை	249
கிதாதாத்பர்யம்	224	சித்திரையில் சித்திரை நாள்	253

காரியாலயம்—71, வெங்கடாங்கம் பிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. (போன் 86109)

துப்பறியும் வீர சிங்கம் ராஜாராம் நாயுடு

வை. மு. கோ. 112-வது நாவல்

14

தர்மத்தின் எல்லேயும் மர்மத்தின் பயங்கரமும்

'இளங்கன்று பயமறியாது' என்ற வசனத்தின்படி பவானி பயமென்பதையே அறியாமல்—நினேயாமல்—இதயத்தில் பொங்கிக் கொந்தளிக்கும் துக்கப் புயலின் வேகம் உந்தித் தள்ளும்நிலேயில்தகப்பனுரைத் திரும்பிக்கூடப்பார்க்காமல் தடதடவென்று நடக்கும் துணிச்சலேக் கண்ட பூபதி முதலில் குழப்பத்துடன் நின்றுவிட்டாரேயன்றி அடுத்த க்ஷணமே புத்திர பாசம் இதயத்தில் அலேமோதித் தள்ளியதால், "அம்மா! பவனீ! பவானீ! இங்கு வாம்மா!... குழந்தாய்! நீ முன்பின் யோசனே செய்யாமல் இம்மாதிரிப் போவது சரியில்லே. என்ன விருப்பினும் உன்னுடைய க்ஷேமத்தை-நன்மையை—கோரிபாடுபடும் உரிமை என்னே விட வேறு யாருக்கும் வந்துவிடாது. நில்லம்மா!" என்று கண்ணீர் பெருகத் தொண்டை தழதழக்க அழைத்தார்.

பவானிக்குத் தான் இனி இங்கிருந்து தன் பிதாவுக்கு உபத்திரவத்தைக் கொடுக்கக்கூடாது என்கிற எண்ணமும் உணர்ச்சியுமே மேலோங்கிவிட்டதால்,' 'அப்பா! மன்னித்துவிடுங்கள்; நான் இதுபரியந்தம் முட்டாள்தனமாக என் மாமனுர் மாமியாரைப்பற்றி நினேக்காமலிருந்துவிட்டேன் என்னிதயமே...ஏன்? பணத்திற்காக பலிகொடுத்த உங்கள் நெஞ்சமே....இத்தனே கலங்கும்போது, பெற்ற வயறு எத்தகைய வேதனேயை அடைந்து துடிக்கும் என்பதை நான் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இனி நேராக என் மாமியார் வீட்டிற்குத் தாயின் துணேயுடன் போகிறேன்; தயவுசெய்து தடங்கல்செய்ய வேண்டாம்; என்னிடம் போதிய அளவு காசு இருக்கிறது; என்னேப்பற்றிக் கவலேயே படவேண்டாம்" என்று கூறியவாறு, "தாயீ! என்னேடுவா! உன்னே நாளேயே திருப்பியனுப்பிவிடுகிறேன்" என்று கூறியவாறு, விடுவிடென்று சென்றுவிட்டாள். தாயியும் கூடவே சென்றுள். ஆனல், தாயிக்கு எந்த விஷயமும் தெரிவ

தற்கே நியாயமில்லை. அவள் பக்கத்திலேயே நின்றால்கூட அறியும் சக்தியற்ற ஊமையாகையால் ஏதோ ஜாடையால் தகப்பனிடம் சண்டைபோட்டுவிட்டுச் செல்வதாகமட்டும் அவள் ஒருவாறு புரிந்துகொண்டாள். பவானி முன்னால் செல்ல, வேலைக்கார ஊமை பின்னால் செல்ல, பூபதியின் குடல் குமுற, அவரால் அசையமுடியாத ஒரு மயக்கமும் திமுப்பமும் உண்டாகித் தம்பிக்கச் செய்துவிட்டது.

தன் பெண்ணின் தைரியமும் தனது பிற்போக்கான வார்த்தைகளும் அவரையறியாமல் அவருள்ளத்தில் புகுந்து வேலை செய்வதை அவரால் தடுக்க முடியவில்லை. பாரத நாட்டின் பெண்களின் மகிமைகளைப்பற்றியும் பதிபக்தியின் ஆழமான சிறப்பைப்பற்றியும் எதற்கும் அசைந்து கொடுக்காத வைராக்ய திடசித்தத்தைப்பற்றியும் பூபதி எத்தனையோ புத்தகங்களில் படித்து அந்தச் சமயம் கனவில் தோன்றும் உணர்ச்சிகளைப்போல் லேசாகத் தோன்றுவதும், பிறகு சோடா வாட்டரின் காஸ் அடங்கி விடுவது போன்ற மறைவும் உண்டாகி இருக்கிறதேயன்றி இந்த நிமிஷம் அவருடைய வயிற்றில் செய்யும் சங்கடம் போன்ற அதிர்ச்சியும் பொருமலும் இதுவரையில் கனவில் கூடக் கண்டதில்லை.

பெற்ற பெண் என்பதைக்கூட மறந்து அவள் மனம் நோகஏதேதோ அசட்டுத்தனமாகப்பேசிவிட்டாரேயன்றி கட்டிய கணவன் என்கிற ஒரே ஒரு கடமையில் பிடித்த நெறியும் பிடிவாதமும் தவறாமல் உறுதியுடன் செல்லும் பவானியை அவரால் அனுப்பச் சகிக்கவே இல்லை. தன்னுடைய அந்தஸ்தையும் வயதையுங்கூடப் பாராமல் பவானியின் பின்னாலேயே ஓடும்படியான நிலைமைகூட உண்டாகியதால் புத்திர வாத்ஸல்யம் உந்தித்தள்ள,— "பவானி! பவானி! இங்கு வாம்மா! போகாதே; நான் தெரியாத்தனமாய்ச் சொல்லியவார்த்தைகளைப் பொறுமைக்குப் பொக்கிஷம் போன்ற நீ மறந்து மன்னித்துவிடு. போகாதே!" என்று வாயைவிட்டுக் கத்தியவாறு பின்னால் தடதடவென்று ஓடினார். அப்போது தோட்டத்துக் காம் பவுண்டுக்குள் போய்க்கொண்டிருந்தாள்.

அடர்ந்து கூடாரம்போட்டதுபோல் கப்புங்கிளையுமாய்ப் படர்ந்துள்ள புன்னை மரத்தடியில் பவானிபோகும் போது, "பவானி! பவானி!" என்று மெல்லிய குரலில் கூப்பிடுவதுபோல் கேட்டதும், தீயை மிதித்தவள்போல் துள்ளியவாறு நடுநடுங்கி நின்றுவிட்டாள். அதே சமயம் தன் பிதா ஓடிவரும் பரிதாபத்தையும் கண்டு துடிக்கிறாள்!

யார் அப்படி மெல்லிய குரலில் கூப்பிடுவது? ...ஒருவேளை அவர்தான் தப்பித்துக்கொண்டு ஓடி வந்திருப்பாரோ?''.... என்று ஒரு மின்னல் தாக்குதல் போன்ற எண்ணம் உண்டாகித் தடை கட்டிய நாகம்போல் நின்று சுற்றுமுற்றும் கூர்மையாகக் கவனித்தாள். மீண்டும், "பவானி! பவானி! பயப்படாதே!" என்ற குரல் கேட்கும் சமயமும் பூபதி தன்னை யணுகிவரும் சமயமும் ஒன்ருகி விட்டதால், பவானிக்கு மின்ஸாரம் தாக்கியது போன்ற வேதனை உண்டாகியது.

தகப்பனுரின் பரிதாபத்திற்கு மனமிரங்கி நிற்பது போல் பாவனை காட்டி நின்றபடியே மரத்தின்மீதும் ஒரு க்ஷணம் நிமிர்ந்து பார்த்தாள். கப்பும் கிளையுமாயிருப்பதால் ஒன்றும் சடக்கென்று தெரியவில்லை. அதோடு குரல் மட்டும் மரத்தின் மீதிருந்துதான் மிகுந்த உஸ் சப்தத்துடன் வருவதால் இதில் மர்மம் இருக்கிறது. இந்தச் சமயம் நாம் இந்த இடத்தைவிட்டுப் போய்விட்டால் ஒருவேளை அவராக இருந்தால் கட்டாயம் அகப்பட்டுக்கொள்வார். அதனுல் நாம் அப்பா அழைப்பதற்காகமனமிரங்கித் திரும்பித் அவருடனேயே செல்வதுபோல் உள்ளே போய்விட்டு, பிறகு தான் கவனிக்க வேண்டும்", என்ற தீர்மானத்தைத் தனக்குள் செய்துகொண்டு நிமிர்வதற்குள், மறுபடியும், பவானி! பவானி! என்கிற குரல் கேட்டுத் திடுக்கிட்டபடியே தவிக்கையில் தகப்பனுரும் உரத்தகுரலில், "பவானி!போகாதேம்மா! நான் ஏதோ முட்டாள்தனமாக உன் மனத்தைப் புண்ணுகும்படிப் பேசி விட்டேன். உன்னுடைய இதயத் துடிப்பை உன் கண்களில் காண்கிறேன் உன்னைப் பெற்ற பிதாவாகிய நான் உனது சுகதுக்கங்களுக்குப் பொறுப்பாளியாய் பாத்யப்பட்டிருக்கும் கடமையை உணர்ந்தேன். வாம்மா! இனி, நான் இப்படிப் பேச மாட்டேன். கோபிக்காதே"என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டபடியே கையைப் பிடித்து அழைத்துச் சென்ருர்.

மகாயூகசாலியும் சமயோசிதமான சூக்ஷ்ம புத்தியை உடையவளுமான பவானி இரண்டு பேருக்கும் பொருள் படும்படியாகப் பேசத் தொடங்கி, "அப்பா! மன்னித்து விடுங்கள்; ஆண்டவன் கைவிடமாட்டான். அவரவர்கள் இருக்குமிடத்திலேயே ஜாக்ரதையாக பகவானை நம்பி பஜித்துக்கொண்டிருந்தால் அவன் ரக்ஷிப்பான் ...என்று என்னிதயத்திற்குள் நம்பிக்கையாக ஏதோ ஒன்று சொல்கிறது. தைரியமாய் நீங்கள் இங்கேயே இருங்கள்; நான் ரக்ஷிக்கிறேன்....என்று அசரீரி கூறுவதுபோல் ஒரு

நம்பிக்கை உண்டாகிறது. ஆகையால், கவலைப்படவேண்டாம் அப்பா!....கண்ணு,மீரா! பயப்படவேண்டாம்....என்று அப்பாவுக்கு நீயும் சொல்லு" என்று காளமேகப் புலவனின் ச்லேடைப் பாடலைப் போல் சொல்லிவிட்டுத் தன் பிதாவுடன் உள்ளே சென்றாள்.

மனது மட்டும் தத்தளிக்கின்றது. முகத்தில் ஈயாடவில்லை. இதயம் அடிக்கும் வேகத்தைக் கணக்கிடவே முடியவில்லை; "மிகவும் மெல்லிய குரலில், யார் அப்படி அழைத்திருக்கமுடியும்? கட்டாயம் இவராகத்தானிருக்க வேண்டும். வேறுயாரும் தைரியமாய் இப்படிவந்து கூப்பிட முடியவே முடியாது என்று தீர்மானமாகத்தோன்றுகிறது. எப்படி மறுபடியும் மரத்தடியில் சென்று பார்ப்பது? அப்பா கூடவே இருக்கிறாரே!மரத்திலிருந்து இவர் இறங்கி வரும்போது யாராவது பார்த்துவிட்டால் என்ன செய்வது?" என்று பலபல எண்ணங்களுடன் குப்புறப்படுத்து விட்டாள்.

தகப்பனர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "பவானீ! கோபித்துக்கொள்ளாதேம்மா! உனக்குள்ள ஆழமான யோசனையும் வைராக்யமும் எனக்கில்லாது போனதுபற்றி வருத்தப்படுகிறேன். அனார்க்கலியின் கதையை உதாரணமாக நீ சொன்ன ஆச்சரியத்தை நான் நினைத்து நினைத்துப் பூரிக்கிறேன். ஒரு உத்தம மனைவியின் செய்கை எத்தகையது என்பதை நீ விளக்கிக் காட்டிய பிறகும் முதலில் நான் அதை உணரவில்லை. நீ வெளியே போகக் கிளம்பிய பிறகுதான் எனக்கு இவைகளின் ஆச்சரியமான சக்தி மனத்தில்பட்டது. அதனால்தான் ஓடிவந்தேன். பவானீ! உன் கணவன் குற்றமற்ற நிரபராதி என்பது கடவுள் சாட்சியாக உண்மையாயிருக்குமானால், நான் அது விஷயத்தில் என் சொத்து பூராவும் அழிந்துவிடுவதானாலும் சரி, கட்டாயம் ஒரு கை பார்த்தே தீர்த்துவிடுகிறேன். அவன் எங்கு ஒளிந்திருக்கிறான் என்பதைக் கூடக் கண்டு பிடித்து அவனை இன்னும் மறைவிடமாகவே வைத்துக் காப்பாற்றவும் நான் துணிந்துவிட்டேன்" என்று சொல்லி முடிப்பதற்குள், ஆவேசம் வந்தவள் போல் துள்ளி எழுந்து தகப்பனாரின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "அப்பா! அப்பா! இப்போது நீங்கள் சொல்லும் வார்த்தை உண்மையானதாப்பா! சத்யமாய் அவர் இருக்குமிடம் தெரிந்தால் நீங்கள் கட்டாயம் அவருக்கு உதவி செய்வீர்களாப்பா! நமது நல்லவேளையின் பயனால் இப்போது வீட்டில் வேறு யாருமில்லை. நாம் மட்டும் இருக்

கிறேம். இன்னும் சில நாளில் அம்மா வந்துவிடுவாள். அப்பா! அவர்....என்று கூறும்போது போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கு நிற்பதைக் கண்டு கதிகலங்கிப்போய் இருவரும் உயிரிருந்தும் உயிரற்ற சவம்போலாகிவிட்டார்கள். பவானியின் இதயம் இன்னும் நூறு மைல் வேகத்தில் அடித்துக்கொள்ளத் துடங்கியது.

15

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை

தன் மகனைக் காணுது கதிகலங்கித் தவித்த ஆனந்தாவுக்கு மகனைக் கண்ட சந்தோஷம் அலைமோதி வடிவதற்குள்ளேயே வெடிச் சத்தமும், விபரீத பயங்கரமும் உண்டாகிவிட்டதால் ஓடிச்சென்று தன் மகனைப் பிடிக்கப் பார்த்தாள். அதற்குள் ராஜா மாடிக்கு ஓடுவதைக் கண்டு பெற்ற பாசத்தின் மிகுதியால் வெட்கத்தையும் மறந்து, "ராஜா! ராஜா! ஓடாதே! மாடிக்கு ஓடாதே!" என்று கூவியபடியே பின்னுலே ஓடினுள்.

அதே சமயம் மற்றொருதரம் வெடிச்சத்தம் கேட்டதும் ஆனந்தா அலறியே போய்விட்டாள். பெரிதாகக் கூச்சலிடும் சத்தம் வேறு கேட்டதுடன் தடதடவென்று ஓடும் ஓசையும் கேட்டது. மின்ஸார விளக்குகள் எல்லாம் குபீரென்று நின்றுபோய் இருள் வேறு சூழ்ந்துவிட்டதால் நடப்பதற்குக்கூடத் தெரியாமல் தவித்தபடி, "ராஜா! ராஜா!" என்று பெரிதாகக் கத்தினுள்.

அதே சமயம் டார்ச் விளக்கு போடும் ஒரு வெளிச்சம் தெரிந்தது. இதற்குள்,....இதென்ன திடீரென்று வெடிச் சத்தமும், ஒரு நொறுங்கும் ஓசையும் கேட்டதே....என்று கேட்டுக்கொண்டே அக்கம்பக்கம் உள்ளவர்கள் ஓடி வந்தார்கள்.

தெருவிலும் கும்பல் கூடிவிட்டது! சிலர் தடதடவென்று மாடிப்படியில் ஏறி ஓடினுர்கள். சிலர் லாந்தர் விளக்குகள் கொண்டு ஓடினுர்கள். மேலே போய் எல்லோரும் பார்க்கும்போது ஜம்புலிங்கத்தின் காலில் அடிபட்டு அப்படியே விழுந்து கிடப்பதையும் ரத்தம் வெள்ளமாக ஓடுவதையும் கண்டு எல்லோரும் திடுக்கிட்டு அலறினுர்கள். போலீஸுக்குச் செய்தி பறந்தது. அடுத்தக்ஷணமே ரிசர்வ் போலீஸ் லாரி வந்து இறங்கிவிட்டது.

இதற்குள் ஜம்புலிங்கம் மெல்ல ஹீனஸ்வரத்தில், "ராஜா எங்கேபாருங்கள்;குழந்தை ஓட்டுப்பக்கம் ஓடினுன்" என்று கூறியவாறு மெல்ல எழுந்திருக்க முயன்ருர். ஓட்டின் பக்கம் தடதடவென்று ஓடினுர்கள். ஓட்டின்மீது உருண்டுபோய் இரும்புக் கம்பியடித்துள்ள முற்றத்துப் பக்கத்தில் ராஜாராம் விழுந்து கிடக்கும் கோராமையைப் பார்த்துச் சிலர் கூகூ! வென்று கத்திவிட்டார்கள்.

உருண்டு விழுந்துவிட்ட அதிர்ச்சியில் நல்லகாயங்களும் பட்டிருந்ததால் ஸ்மரணையற்றுக் கிடக்கும் நிலைமையில் எதையோ கையில் கெட்டியாகப் பிடித்திருந்தான். அவனுடைய பரிதாபகரமான நிலையைக் கண்ட அவன் பெற்ருேர் தீயை மிதித்ததுபோல் துள்ளிக் கதறிவிட்டார்கள். ராஜாவைத் தூக்கிவந்து கிழே கிடத்தி போலீஸ் டாக்டர் முதல் சிகிச்சை செய்ததும் சற்று கண்ணைத் திறந்து பார்க்கையில், "திருடன்....திருடன்........துணி எங்கே?"... என்று குளறியவாறு மிரண்டுமிரண்டு பார்த்தபடி எழுந்திருக்க முயன்ருன். அதிகமான வலி தாங்காமல் ஐயோ அம்மாவென்று கத்தினுன்.

ஒரே அல்லகல்லோலத்திற்கிடையில் ஜம்புலிங்கத்தையும் ராஜாவையும் உடனே போலீஸார் ஆஸ்பத்ரிக்குக் கொண்டுபோய்விட்டார்கள். சில போலீஸார்மட்டும் அந்த மெத்தையில் காவலிருந்தார்கள். ஆநந்தாவும் அவள் கணவரும் மிக்க வருத்தத்துடன் கூடவே ஆஸ்பத்ரிக்குச் சென்ருர்கள்.

ராஜாராம் கையில் பிடித்திருந்த துணியை மட்டும் விடவேஇல்லை. சிறிது நேரங்கழித்து ராஜாவுக்குத் தெளிவு உண்டாகியதும், "மாமா! துணி! துணி!" என்று கத்தினுன். இன்ஸ்பெக்டர் மாமா எங்கே?....என்று சுற்றுமுற்றும் பார்த்தான். ஜம்புலிங்கத்தின் காலில் துப்பாக்கி ரவை உராய்ந்துகொண்டுபோன அதிர்ச்சியில் அவர்சிறிதுநேரம் ப்ரஜ்ஞையற்றிருந்தார். சிகிச்சை செய்தபிறகு சற்றுத் தெளிவு பெற்றதும் அவரும், "ராஜா எங்கே? குழந்தை எங்கே?" என்றுதான் முதல் கேள்வி கேட்டார்.

"ராஜாவுக்கு ஆபத்து ஒன்றுமில்லை. அவன் வேறு இடத்தில் படுத்திருக்கிருன்" என்ருர் டாக்டர். ஜம்புலிங்கம், "அவனையும் என் பக்கத்தில் கொண்டுவந்து விடுங்கள்"என்ருர். உடனே ராஜாவை அவர் பக்கத்தில் கொண்டுவிட்டார்கள். ஜம்புலிங்கத்தின் காலில் பெரிய

கட்டுகட்டியிருப்பதைக் கண்டு ராஜா மனந்தாங்காமல், "மாமா! உங்கள் காலில் அந்தப் படுபாவி சுட்டுவிட்டானா!" என்று அழுதுவிட்டான். எல்லோரும்சேர்ந்து ராஜாவைச் சற்று ஆச்வாஸப்படுத்தினார்கள்.

ராஜாவின் உடம்பு பூராவும் அடிபட்டுக் கட்டுக் கட்டியிருப்பதால் அதிகம் அசைக்க முடியாத நிலைமையிலும் ஜம்புலிங்கத்தைத் தடவிக்கொடுத்தபடியே, "மாமா! என் கையிலிருந்த துணி எங்கேயோ காணவில்லையே!" என்று நாற்புறமும் பார்த்தான். இதற்குள் டாக்டர், "அந்தத்துணி இதோ இருக்கிறது" என்று காட்டினார். மாமா! மாடியில் முதலில் கண்ணாடியில் ஏதோ நிழல் தெரிகிறதென்று சொன்னேனே. அப்போது நீங்கள் மாடிக்குச் சென்ற உடனே வெடிச்சத்தம் கேட்டதும் நானும் பயந்து நடுங்கியவாறு மாடிக்கு ஓடிவந்தேன். ஓட்டின்மீது யாரோ ஓடுவதை நிழலால் அறிந்துகொண்டு நான் மெல்ல படுத்தவாறு நீந்திக்கொண்டே போய் அவன் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டிவிட வேண்டும் என்கிற அஸாரதைரியத்துடன் இருட்டில் சென்றேன். அவன் நிற்கும் திசைக்குப் பின்புறமாகச் சென்று கையைத் தட்டிவிட்டுக் காலையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன்....

"இமை இசைக்கும் நேரத்திற்குள் கீழே பலமாக விழுந்த அதிர்ச்சியினால் துப்பாக்கி மறுமுறையும் வெடித்துவிட்டது. அதே சமயம் அந்த மடையன் தன்னுடைய பலங்கொண்ட மட்டும் காலால் என்னை உதைத்து எப்படியோ உருட்டிவிட்டான். அந்த வேகத்தில் நான்உருளும் சமயம் அவன் கட்டியிருந்த துணியைக் கெட்டியாகப் பிடிந்துக்கொண்டேன். அதுவும் என் கையுடன் உருண்டு வந்தது!

"அதே சமயம் யார் யாரோ தடதடவென்று மாடிக்கு வரும் ஓசை கேட்டதுதான் தாமதம். தைரியத்துடன் நான் உருண்ட நிலையிலேயே அந்த முரடனை உற்றுக் கவனித்தேன். அவன் வேறு யாருமில்லை. பேனாவை நான் திருடிவிட்டதாகச் சொல்லிய மகா பாவியேதான். உருண்டு விழும் வேகத்தில் எனக்கு ஏதோமாதிரி கண்ணைச் சுற்றிக்கொண்டு மயக்கமாக வந்தது. பிறகு ஒன்றுமே தெரியவில்லை" என்று மூச்சு விடாமல் அத்தனை சிறிய பையன் சொல்லிய வார்த்தைகளையும் துணிச்சலான செய்கைகளின் வீரத்தையும் கேட்டு ஜம்புலிங்கத்தின் இதயம் அடைந்த பேரானந்தத்திற்கு எல்லையே இல்லாது பொங்கி, "ஹாஹா!" என்று ஆர்ப்பரிக்கச் செய்துவிட்டது. தன்னுடைய வலி பூராவும்க்ஷணநேரம் மறந்தேபோய்விட்டது

போல் ஒரு அபூர்வ உணர்ச்சியும்பூரிப்பும் உண்டாகியதால், "ராஜா!....என்னப்பனே ராஜா! நீ சாமான்யப் பைய னல்லடா! இத்தனை பெயரும் புகழும் சம்பாதித்துள்ள என்னையே ப்ரமிக்கச் செய்துவிடும் நீ தீர்க்காயுஸுட னிருந்து துப்பறியும் வீரசிங்கமாக விளங்க வேணுமடா! இனி உன்னை நான் விடப்போவதேயில்லை. என்னுடைய பிள்ளையாகவே உன்னைக் கருதுகிறேன். என்ன சூரத் தனம்! என்ன யோசனை!" என்று பலர்முன்பு பேசியதைக் கேட்டு, எல்லோரும் பூரித்துப் போனார்கள்.

ஜம்புலிங்கம் களிவெறி கொண்டு ராஜாவைப் படுத்த படியே தட்டித்தடவிக் கொடுத்தவாறு, "ராஜா! அந்த அயோக்யப் பயல்தான் பேனுக்காரன் என்பது உனக்கு நன்றாகத் தெரியுமா? ஏதோ சந்தேகத்தினால் சொல் கிறாயா?" என்றார்.

ராஜா:—மாமா! முதல்லே எங்கம்மாவும் அப்பாவும் எங்கே பாருங்கோ! அவா இந்தப் பயங்கரங்களைப் பார்த்து உயிரையே விட்டிருப்பா....எங்கே கூப்பிடுங்கோ டாக்டர்! என்று கூறும்போது இத்தனை நேரம் இருந்த வேகமும் படபடப்பும் குறைந்து போய் பெற்றோர்களின்மீது பாசம் உண்டாகிப் பதறச் செய்தது.

உடனே ஜம்புலிங்கத்திற்கும் பையனின் உணர்ச்சியும் உண்மையும் அப்போதுதான் உள்ளூர உறைத்தது. காலை முதல் பையனைக் காணாமல் தவித்தவர்களுக்கு இப்போது எப்படி இருக்கும் என்று தோன்றியதால் உடனே அவர் களை இவ்விடத்திற்கே அழைத்து வரும்படிக் கட்டளை இட்டார்.

புன்சிரிப்புடன் டாக்டர் பேசத்தொடங்கி, "அவர்கள் ஒருவித கவலையுமின்றி இந்த அறைக்கு வெளியில்தான் இவைகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதோ கூப்பிடுகிறேன்" என்று கூறியபடி வெளியே சென்று ராஜாவின் பெற்றோர்களுடன் சந்தோஷமாக உள்ளே வந்தார். ராஜாவும் மகிழ்ச்சியுடன் 'அம்மா! அப்பா!' என்று கூப்பிட்டுத் தன் சந்தோஷத்தைத் தெரிவித்துப் பூரித்தான். "அம்மா! எனக்கு அடிபட்டு விட்டதோ! உயிரே போய்விட்டதோ! என்று நீ பயந்து விட்டாயாம்மா! எனக்கொன்றுமே ஆடத்தில்லை; பயப் படாதேம்மா........இன்ஸ்பெக்டர் மாமா! அவன் பேனுக் காரன்தானு என்று சந்தேகப்பட்டுக் கேட்கிறீர்களா?

கட்டாயம் அவன் பேனுக்காரன்தான் மாமா!..........
பேனவைத் திருடிவிட்டதாக என்னைப் பிடித்துக்கொண்டு வம்படித்தபோது நான் அவன் கையை நன்ருகப் பார்த்தேன். கட்டை விரலுக்குப் பக்கத்தில் ஒரு குட்டிவிரல் பச்சைமிளகாய்போல் முளைத்திருக்கிறது! துப்பாக்கியை அவன் பிடித்திருக்கும்போது நன்ருகத் தெரிந்தது. அவன் தலையில் முண்டாசு கட்டியிருந்ததால் முகத்தில் ஜாடை நன்ருகத் தெரியாது சிறிது குழப்பமும் சந்தேகமும் உண்டாகியதால் ஒரு எகுருஎகிறிக் குதித்து முண்டாசுத் துணியைத் தள்ளிவிட்டேன். பிறகு சந்தேகமே இல்லாமல் நன்ருகத் தெரிந்து விட்டது மாமா! முதலில் லாக்கப்பில் அவன் இருக்கிருஞ என்று பார்க்கச் சொல்லுங்கள் மாமா! எப்படியோ தப்பியோடி வந்து என்னை வஞ்சம் தீர்த்துக் கொன்றுவிடவே அவன் என் வீட்டிலேயே வந்து பதுங்கிவிட்டான் என்று தோன்றுகிறது. இல்லையா மாமா!" என்ருன்.

ஒன்றுக்குமேல் ஒன்ருகப் பையனின் யோசனையும் யூகமும் சாமர்த்யமும் ஒன்றுகூடி அபாரமாய்ப்ரகாசிப்பதைக் கண்ட ஜம்புலிங்கத்திற்கு ஆச்சரியமும் ஆநந்தமும் பின்னும் பொங்கியது. பையன் சொல்லியஉடனேயேதான் லாக்கப்பில் போய் பார்க்கும்படி சொல்லியனுப்பாமல் முட்டாள் போலிருந்து விட்டோமே! இப்போதுதான் பையன் சொல்லிய பிறகு அனுப்புகிறேனே. இதைக் கண்டால் பிறர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள். என்றுகூட தோன்றியது.

"ராஜா! உன்னை எத்தனைதரம் தோத்திரம் செய்தாலும் போதாதுபோல் அத்தனை ஆநந்தம் கொந்தளிக்கிறது....டேய் 190! முதலில்போய் ஸ்டேஷனில் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக்கொண்டு லாக்கப்பையும் பார்த்துவிட்டுவா!" என்று கட்டளை இட்டார்.

அதற்குள்ளேயே ஸ்டேஷனிலிருந்து அலையக்குலைய ஆள் வந்துவிட்டது. "ஸார்! ஸ்டேஷனில் ஒரே ரகளை லாக்கப்பிலிருந்து ஒரே சமயத்தில் மூன்று பேர்கள் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டிருக்கிருர்கள். ரிக்ஷாவாலாவாக வந்த முருகப்பன், பேனுக்காரன், பழயகேடி அங்கமுத்து மூவரையும் காணவில்லை. மாலை கஞ்சிவார்க்கக் கதவைத் திறந்தார்கள். ஒரே குழப்பம். அடிதடி. வார்டன் மண்டையில் பலத்த காயம். சில கைதிகளுக்கும் நல்ல அடி.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் நீங்கள் இல்லாத சமயத்தில் நடந்துவிட்டது. போட்ட கதவு போட்டபடியே இருக்கிறது. எப்படியோ அந்த மூவரும் கேட்டு வார்டனைத் தாக்கித்தள்ளிவிட்டு ஓடியிருக்கிறார்கள்" என்று படபடத்து மூச்சுக்கூடச் சரியாக விடமுடியாமல் சொல்லியதைக் கேட்ட இன்ஸ்பெக்டருக்கு எங்குமில்லாத கோபம் தீ போல் வந்து கண்கள் சிவந்து உதடு துடிக்கச் சடக்கென்று எழுந்திருக்கப்போனார். காலில் பலமாகப் பட்டுள்ள காயத்தின் வலி, ஹாவென்று முனகியவாறு சாய்த்துவிட்டது.

பல்லைக் கடிக்கிறார். ஆட்களைத் திட்டிச் சிங்கம்போல கர்ஜிக்கின்றார். "முட்டாள் பயல்களா! போலீஸ்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு உங்களுக்கு வெட்கமில்லையா? மானங்கெட்ட மடையர்களே! நீங்கள்எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தீர்களா? அல்லது சோம்பேறிக் கூட்டம்போல் ஒன்றுகூடி அரட்டை அடித்துக்கொண்டிருந்தீர்களா? உங்களால் என்மானம் போகின்றது. இச் சின்னஞ்சிறு பையனுக்கு இருக்கக்கூடிய சூக்ஷ்ம புத்தி, தீர்க்க ஆலோசனை, சமயோசித சாதுர்யம் முதலியவைகளில் அணுப்பிரமாணம்கூட இல்லாத உங்களுக்கு எப்படித்தான் இந்தப் போலீஸ் உத்யோகம் கிடைத்ததோ தெரியவில்லையே; தலைவிதி! இப்போது எப்படி அந்த மூன்று பேரையும் கண்டு பிடிப்பது? அரும் பாடுபட்டு நாய்போல் அலைந்து அந்த முருகப்பனை பிடித்துக்கொண்டு வந்து லாக்கப்பில் அடைக்கப்பட்ட பாடு கடவுளுக்கு வெளிச்சம். ஒரு நிமிஷத்தில் அத்தனை பலனையும் போக்கடித்து விட்டீர்களே. போங்கள்! மூலைக்கொருவராகப் போய்த் தொலையுங்கள்....தேடுங்கள். நாளை காலைக்குள் அவர்களைப் பிடித்துக்கொண்டு வந்து கொடுக்காவிட்டால் உங்களுக்குக் கட்டாயம் கரும்புள்ளி விழுந்தேதீரும்" என்று தொண்டை கிழியக் கத்தினார்.

இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ராஜாராமனுக்கு பயத்தினால் உடம்பு நடுங்கியது. தன் தாயாரை அருகில் இழுத்துச் சேர்த்துக் கட்டிக்கொண்டான். உண்மையில் ஆனந்தாவிற்கும், அவள் கணவனுக்கும் விஷயம் என்னவென்று விளங்காமலேயே இதயம் படபடவென்று அடித்துக் கொள்கிறது. ஏதோ புத்திசாலித்தனமாயும், சாமர்த்தியமாயும் நடந்துகொண்ட சந்தோஷத்தை முற்றிலும் அனுபவிப்பதற்குள் ஆபத்து வீட்டைத் தேடிக்கொண்டு வந்துவிட்ட அதிர்ச்சியையே இன்னும் தாள முடியவில்லை. அதற்குள் புரியாத புதிர்போல் ஏதோ சொல்கிறார்களே.

இதனால் நம் குழந்தைக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விடுமா? அசட்டுப் பையன் தன் போக்காகப் பள்ளிக்கூடம் போய்ப்படித்துவிட்டு லக்ஷணமாகவீட்டிற்கு வந்துசேராமல் இதுஎன்ன போலீஸ்கார சிநேகமோ? போலீஸ் ஸ்டேஷன் வாஸமும் பயங்கரமாக இருக்கிறதே இங்கிருந்து அவனை எப்படியாவது வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய்விட்டால் போதும்....என்று ஆனந்தா மனத்திற்குள் எண்ணிப் பெருமூச்சுவிட்டவாறு,டாக்டரைப்பார்த்து,"டாக்டர் ஸார்! தயவுசெய்து குழந்தையை எங்களுடன் அனுப்பிவிடுங்கள். நான் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்கிறேன் அவன் தனியாக இருக்கவேமாட்டான். நாளைக் காலையில் வேண்டுமானால் கூட்டிக்கொண்டு வருகிறேன். இல்லையேல் நீங்களே அங்கு வந்து விடுங்கள். சகல சௌகரியங்களையும் செய்து கொடுக்கிறேன்" என்று தாயுள்ளத்தின் வாத்ஸல்யத்தைத் திறந்து காட்டுவதுபோல் கேட்டாள். இதைக் கேட்ட டாக்டர், ஆனந்தாவின் இதயத்துடிப்பை நன்கு உணர்ந்து, அவளைச் சமாதானம் செய்யும்பொருட்டு, "அம்மணி! தாங்கள் கவலையே படவேண்டாம். உங்கள் மகனுக்கு எத்தகைய ஆபத்தும் நேராமல் கடவுள் காப்பாற்றி விட்டார்.லேசானகாயங்கள்தான்பட்டிருக்கின்றன. மஹா கூர்மையான புத்தியுடைய ராஜாவை ஜம்புலிங்கம் அபாரமாகக் கொண்டாடுகின்றார். எதிர்பாராமல் இத்தகைய சிநேகமும், புகழும் கிடைப்பதென்பது சாமான்யமானதல்ல. உலகத்தில் எப்போதும் அதிக மேதாவிகள் அடிக்கடி பிறப்பதில்லை. அநேக வருஷங்களுக்கொரு முறைதான் பிறப்பார்கள் என்பது உலகப்பிரசித்தம். அத்தகைய உயர்ந்த லக்ஷியவீரனைத்தான் இவனும் பிறந்திருக்கிறானோ?.........என்றுதான் நானும் வியந்து பூரிக்கின்றேன். பையனோடு கூடவே நீங்களும் இருப்பதற்கு நான் அனுமதி தருகின்றேன். நீங்களும் இங்கேயே இருங்கள்" என்று மெல்லிய குரலில் கூறினார்.

அதே சமயம் ஜம்புலிங்கம் டாக்டரைப் பார்த்து, "டாக்டர்! இந்தப் பையனை ஜாக்ரதையாக உங்களுடைய பாதுகாப்பில் வைத்துக்கொண்டிருங்கள்! அவனைவீட்டிற்கு அனுப்பவேண்டாம். நாம் எதிர்பாராமலேயே ஆபத்து அவன் வீட்டைத் தேடிக்கொண்டு வந்து அவனையும், என்னையும் சேர்த்துத் தாக்கியிருக்கிறது. இனிமேல் அவன் வீட்டிற்குப்போனால் கட்டாயம்தப்பியோடியிருக்கும் பேனாக்காரனோ அல்லது முருகப்பனோ இந்தப் பையனைத் தீர்த்துக் கட்டிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பான் என்று என் இதயத்தில் ஏதோ ஒன்று சொல்கிறது. அவன் அபூர்வ

பிறவி என்பதையும் என் இதயம் நன்றாக அறிகின்றது. ஆகையினால், அவனைக் கட்டிக் காப்பாற்ற வேண்டிய கடமை நம் கையில் இருக்கிறது.

இப்பொழுது முதலில் என்னை எப்படியாவது காரில் உட்காரவைத்து ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போயாகவேண்டும். அங்குள்ள நிலையை நான் நேராக ஒருமுறை பார்த்தால்தான் தெரியும். ஆகையால், உடனே ஏற்பாடு செய்யுங்கள்...என்று கடுமையாக உத்திரவிடுவது போல் கூறினார். இதைக் கேட்ட டாக்டர், "இன்ஸ்பெக்டர் ஸார்! கோபிக்கக்கூடாது. என்னை மன்னித்து நிதான மாகக் கேளுங்கள். சுட்டுப் பழக்கமில்லாதவனும், சுடத் தெரியாதவனும் எப்படியோ உங்களைத் துலைத்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் துப்பாக்கியைப் பிடிக்கத் தெரியாமல் தாறுமாறாகப் பிடித்துச் சுட்டிருக் கிறான். உங்களுடைய நல்ல காலத்தின் பயன் அபாயகர மான இடங்களில் படாமல் தொடையில் உராய்ந்து கொண்டு போயிருக்கிறது. அதனால், ரத்தம் அதிகமாக வெளிப்பட்டிருப்பதோடு மெல்லிய நரம்புகள் சில அறுந்தும் போயிருக்கிறது. அவற்றைச் சரிப்படுத்திச் சேர்த்துக் கட்டுக்கட்டியிருக்கிறேன். இச்சமயத்தில் கால் அசைந்து அதிர்ச்சி ஏற்படுமானால் கட்டாயம் விபரீதமாகி ரண ஜன்னியே கண்டுவிடும். ஆகையால், நாளை காலைவரையில் தயவுசெய்து இப்படியே படுத்திருந்தால் நரம்புகள் ஒன்றோ டொன்று சேர்ந்து ஒட்டிக்கொண்டுவிடும். பிறகு உங்களை அழைத்துக்கொண்டுபோக ஏற்பாடு செய்கிறேன். கொஞ் சம் சாந்தி அடையுங்கள்" என்று வெகு நயமாகவும், அன்பாகவும் கூறினார்.

இதற்குமேல் ஜம்புலிங்கத்தினால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆத்திரம் மட்டும் நெஞ்சைப் பிளந்துவிடும் போல் இருக்கிறது. சிக்கல்முக்கலான கொலைவழக்கின் குற்றவாளியைக் கண்டுபிடித்துப் புகழ் ஏணியில் ஏறி விட்டோம் என்று சந்தோஷப்படுவதற்குள் முட்டாள் பயல் களின் செயலால் 'தோல்வி' என்ற படுகுழியில் தள்ளப்பட்டு விட்டோமே....என்று உள்ளம் துடிக்கின்றது. தனக்குக் கீழுள்ள சில இன்ஸ்பெக்டர்களுக்கும், தனக்கு மேலுள்ள அதிகாரிகளுக்கும் விவரங்களைத் தெரிவித்து நடவடிக் கைகள் எடுத்துக்கொள்ளும்படியாகச் சொல்லி யனுப்பி விட்டார். அவர் உள்ளத்தில் பெரும்புயல் அடிப்பது போன்ற வேதனை உண்டாகி வாட்டியது.

*

சென்னை ரேடியோவில்

தென்னிந்திய கலியாண முறைகள்

இசை நிகழ்ச்சி

நாளது ஜூலை 1, 8, 15, 22, 29 தேதிகளில் (ஐந்து வெள்ளிக்கிழமைகளிலும்) பகல் 1 மணி முதல் 1-30 வரை சென்னை ரேடியோவிலிருந்து ஜகன்மோகினி ஆசிரியை, வை. மு. கோ. நமது நாட்டுக் கல்யாண ஸம்ப்ரதாய தத்துவங்களைக் குறித்துப் பேசுவார். வை. மு. பத்மினியும், குமாரி ஜி. பி. கமலாவும் கல்யாண பத்ததிப் பாடல்களைப் பாடுவார்கள்.

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

எனக்கிப்போது வயது 26 ஆகிறது. என்னுடன் கூடப் பிறந்தவர்கள் ஏழு பேர்கள் இருக்கிறார்கள். எனக்கு முதலில் கல்யாணத்தைச் செய்த பிறகுதான் என் தங்கைகளுக்கும் தம்பிக்கும் கல்யாணம் செய்ய வேண்டும் என்பதனால் நான் 14 வயதை எட்டிப் பார்ப்பதற்குள் கல்யாணத்திற்கான சுயம்வரம் கொண்டாட ஆரம்பித்து விட்டார்கள்.

எனக்கென்னவோ கட்டோடு பிடிக்கவில்லை. தாயார் தகப்பனார்மீது எரிந்து விழுவேன். என்னையவர்கள் சிடுசிடுப்பார்கள். விடிந்தால் அஸ்தமித்தால் பெண் பார்க்க வரும் படலம் எனக்குத் தலை நோவாகிவிட்டது. சனியன் பிடித்த பெண் என்னோடு சேர்ந்து ரெட்டையாகப் பிறந்து விட்டவள் கல்யாணத்திற்குப் பறக்கிறாள். நானோ வெறுக்கிறேன்.

கடைசியில் இவர்கள் தொல்லை சகிக்காமல் மாமா வீட்டிற்குப்போய், "என்னைக் கல்யாண ஆபத்திலிருந்து காப்பாற்றி எங்காவது அனாதை-விடுதி அது,இது,இருக்கிறதே—அங்குக் கொண்டு சேர்த்துவிடுங்கள். நான் நிம்மதியாயிருப்பேன். மற்றவர்களுக்குக் கல்யாணமாகட்டும், நான் படித்து வ்ருத்திக்கு வர ஆசைப்படுகிறேன்" என்று அழுதேன். மாமா பெரிய மனது செய்து என்னை ஒருஹாஸ்டலில் சேர்த்துவிட்டதோடு எப்படியோ என் பெற்றோருக்கும் சமாதானம் செய்து வைத்தார்.

நான் ஹாஸ்டலை விட்டு விடுமுறைக்குக்கூட என் பெற்றோரிடம் போக மனம் வராது வெறுத்து நிம்மதியாக ஹாஸ்டலிலேயே இருந்தேன். நான் வீட்டை விட்டுப் போனதை மிகவும் தவறுதலாக்கி என்மீது பலபல துர்அபிப்பிராயங்கள் மலைபோல் வளர்ந்து வந்ததை முதலில் நான் கவனிக்கவே இல்லை. 'பெற்றோருக்கு அடங்காத பிடாரி. ஓடிவிட்ட கழுதை' என்று முடிவுகட்டி விட்டார்களாம்.

என் தலைத்திமிர் நான் எதையும் லக்ஷியம் செய்யாமலிருந்தேன். என் மாமாவும் இறந்துவிட்டார். அந்த ஹாஸ்டலுக்குள்ளேயும் நான் மிகவும் முன்கோபக்காரி, பொல்லாதவள் என்று பெயரெடுத்ததால் என்னைத் துரத்திவிட்டனர். நான் எங்கே போகமுடியும்?........பெற்றோரிடம் பயந்து கொண்டே வந்து சேர்ந்தேன்.

முதலில் கிடைத்த திட்டும் சீற்றமும் சொல்லி முடியாது. என் தம்பியும் அவன் மனைவியும், தங்கையும் அவள் கணவனும் கூடிக்குலாவி வாழ்வதையும் அவர்கள் என்னை இளப்பமாகப் பேசிச் சிரிப்பதையும் பார்த்த பிறகுதான் எனக்கு எனது சிறிய வயதின் தவறுதல் நன்றாகத் தெரிந்தது.

இனி எது தெரிந்து என்ன பயன்? கெட்டுப்போனவளை எப்படி நடத்துவார்களோ அப்படியே என்னை நடத்தத் தொடங்கினார்கள். யாருமே என்னை லக்ஷியம் செய்யவில்லை, பெற்றோரும் மறைந்தார்கள். அவர்களுடைய வார்த்தையைக் கேட்காமல் நான் ஏதோ குருட்டுப் பிடிவாதத்துடன் இருந்ததைப் பிறகு உணர்ந்து நானே வருந்தினேன்.

எனக்குக் கட்டாயம் ஒரு பாதுகாப்புத் தேவை என்பதை நானே உணர்ந்தேன். மூன்றாந்தாரத்திற்காக வலை போட்டுத் தேடிக்கொண்டிருந்த ஒரு 45 வயது கிழவனுக்கு நான் மணம் என்கிற பெயரால் அடிமையாகி இருக்கிறேன்.

பெற்றோர்களின் வாத்ஸல்யம் நிறைந்த அன்பும் ஆதரவும் கூடிய முறையில் அவர் தேடிச்செய்துள்ள விவாகத்தின்மூலம் என் கூடப் பிறந்தவர்கள் மிகவும் கம்பீரமாகத்தான் இருக்கிறார்கள். நான் எத்தனையோ விதத்தில் குறைவு குறைவாகத்தான் இருக்கிறேன். எனக்கு சுயமதிப்பு என்பது சிறிதுமில்லாது போகும்படி நானே செய்துகொண்டு விட்டேன்.

என்னைப் போன்ற பெண்கள் யாரும் அம்மாதிரி பெற்றோருக்கு அடங்காமல் மீறி நடக்காதீர்கள் என்று எச்சரிக்கிறேன். ஏற்கெனவே பெயர் கெட்டுவிட்டதால் என்னை மணந்தவருக்கு நான் நின்றால் குற்றம், நடந்தால் குற்றம், பார்த்தால் குற்றம் என்றாகிவிட்டது. பாக்கு வெட்டியின் மத்தியில் அகப்பட்ட பாக்குப்போல் நான் வாழ்க்கை நடத்துகிறேன்.

இதை நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் என் மனது வெடித்து விடும்போலிருக்கும் பாரத்தைச் சிறிது குறைக்கவே இதை எழுதுகிறேன். பெரியவர்களுக்கு அடங்காததால் இப்போது நிரந்தர அடிமையாகி விட்டதோடு மரியாதையும் குறைந்துவிட்டது.

சத்யமாக நான் கனவில்கூட கற்பு அழிந்தவளல்ல. இது கடவுளுக்குத் தெரியும். என்னுடைய செய்கையின் பலனால் இப்படியாகிவிட்டேன்! "உண்மை விளம்பி"

வை. மு. பத்மினி ஸ்ரீனிவாஸன் சிறுகதை

மன மாற்றம்

"லக்ஷ்மி!..... இது என்ன அசட்டுத்தனம்! கல்யாண சத்திரத்திற்குச் சுபமாய்க் கிளம்பும்பொழுது இப்படி அழலாமா?...நடப்பது நடந்துவிட்டுப் போகிறது. வீணுய்க் கவலைப்படாதே. அதுவரை கை பிடிக்கப்போகும் கணவர் த்ருப்திமாய் இருக்கிருர். அது உன் அதிர்ஷ்டம்தான். இன்று இல்லா விட்டால் என்ன?........ நாளையே உன் மாமா உன்னை விட்டுக்கொடுக்கமாட்டார். உன் கணவருடன்போய் அவர் உறவைப் பிடித்துக் கொள்ளேன், அப்போது உன் அப்பா என்ன செய்யமுடியும்?"...என்று மெஷினைப்போல் அருமை மகளை அணைத்தவாறு தேற்றினுள்.

இதைக் கேட்கக்கேட்க, லக்ஷ்மியின் துக்கம் இன்னும் பீறிட்டது. இதுவரை மனதோடு பழகிய துக்கம் இப்போது வெளிப்பட, கேவிக்கேவி அழுதாள். "சித்தி! நீ சொல்லுவது சரிதான். என் தாய்க்கு மேலாய் நீ எனக்குத் தாயாய் இருக்கிருய். என் தாயார்தான் கல்யாணத்தைப் பார்க்கவில்லை என்ருல், தொங்கத்தொங்க பாட்டி, தாத்தா, மாமா, மாமி இருக்கிருர்களே. அவர்களும் என் கல்யாணத்திற்கு வந்தால்தானே என் மனம் குளிரும். அப்பாவுக்கு என்ன அவ்வளவு பிடிவாதம்? போனதெல்லாம் போகட்டும்; இனியாவது லக்ஷ்மியை உத்தேசித்து வந்து கல்யாணத்தை நடத்திவையுங்கள் என்று ஒரு வார்த்தை கூப்பிட்டால் அவர்கள் ஓடிவரக் காத்திருக்கிருர்களே! நீ தான் அப்பாவுக்குச் சொல்லிப்பாரேன், சித்தி!" என்று கெஞ்சிக் கேட்டாள்.

"ஊம்! வேண்டியது உன்பாட்டியும், நானும் சொல்லி ஆயிற்று. மூர்க்கதோடு யார் சொல்ல முடியும்? உனக்காகத் திரும்பவும் சொல்லிப் பார்க்கிறேன். நீ அசடுபோல் அழாதேம்மா...சமர்த்தா இரு" என்று சமாதானம் செய்துவிட்டுச் சென்ருள். குழம்பிய உள்ளத்தோடு, சித்தி போனவழியே பார்த்தவாறு விறைத்து நின்ருள், லக்ஷ்மி.

❀

சற்று நேரத்திற்கெல்லாம் பக்கத்து அறையில் சித்தியும், அவள் தந்தையும் பலத்த குரலில் இரைந்து பேசுவது கேட்டது. ஒட்டுக் கேட்பது தவறு...என்ருலும் அவள் காதுகள் அவளையும் மீறி ஒட்டுக்கேட்டது! அப்போது சித்தியின் குரல் உச்சஸ்தாயியில், "அப்போது மூத்த மனைவி வேண்டாம்... அவளைச் சேர்ந்தவர்கள் வேண்டாம் என்று தள்ளினீர்களே!......அவள் பெற்ற பெண் மட்டும் ஆகும் என்றுதானே லக்ஷ்மியை அவர்களிடம் இருந்து பிரித்தீர்கள்!... அப்போது அந்தப் பெண்ணின் சுகதுக்கத்திற்கும் நீங்கள் பாத்யதை உள்ளவர்கள்தானே...ஒரு நல்ல நாளில் குழந்தை கண்ணைக் கசக்கினுல் அது உங்களுக்கு க்ஷேமமா?...நீங்கள் செய்வது நன்ருகவே இல்லை. எது எப்படி ஆனுலும் கூப்பிட்டுத்தான் ஆக வேண்டும. அப்புறம் உங்கள் இஷ்டம்! நாலு வார்த்தைக்கு இடம் வைக்காமல் இன்றே போய் அழைத்துவிட்டு வாருங்கள். குழந்தை மனதும் த்ருப்திப்படும். எனக்கு இருக்கும் அன்புகூட உங்களுக்கு அந்தக் குழந்தையிடம்

இல்லையே! அதன் முகத்தைப் பார்க்க சகிக்கவில்லை. நம் சண்டையைப் பார்த்தால் நாலு பேர் சிரிப்பார்கள். அதுவும் இல்லாது அவர்களைக் கூப்பிடாததற்கு நான்தான் காரணம் என்று வேறு சொல்லி விடுவார்கள். இரண்டாம்பேர் அறியாது போய் வாருங்கள்"...என்று மூச்சு விடாது சொல்லி முடித்தாள்.

ஐயோ! அப்பாவின் வாயில் என்ன பதில் வருமோ? என்று நடுநடுங்கிய லக்ஷ்மி உன்னிப்பாய்க் கவனித்தாள். சிங்கத்தைப போல் கர்ஜிக்கும் குரலில், "விட்டுப்போனது போனதுதான்!... இனி உறவு ஒட்டாது! என்னால் கூப்பிட முடியாது...நான் போக மாட்டேன்" என்று இரைந்துகொண்டே போய்விட்டார்.

இதைக் கேட்ட லக்ஷ்மி ஒன்றும் தோன்றாது துக்கத்தை அடக்கிக்கொண்டு கல்லாய்ச் சமைந்தாள். தொஙகிய முகததோடு அவள் சித்தி ஜானகி லக்ஷ்மியின் அறையில் பரவேசித்தாள். சித்தியும், மகளும் நெடு நேரம வருந்தித் தவித்தார்கள்; ஆனால், பலன்?...

❋

ராமசந்திரன் கவர்ன்மென்ட் ஆபீஸில் நல்ல உத்யோகத்தில் இருந்தார். மாதம் 300 ரூபாய் சம்பளம். தன ஒரே அருமை மகன, மகள் இருவரையும் இரணடு கண்களுக்குச் சமமாயப் போற்றி வளர்ததார். அவர் அருமை மகள் சீதா இயற்கையிலேயே மிக அழகு வாயந்தவள். அதோடு யௌவனமும சேர்ந்து அவளது அழகை இன்னும் பதின மடங்காக்கியது. தன மகளின அழகைக் கணடு பரமித்த ராமசந்திரன் அவளுக்குத் தகுந்த கணவனைத் தேடுவதில் முனைந்தார்...ரதிபோன்ற மகள் சீதாவின் அழகிற்கு ஏற்ற மன்மதன் கிடைக்க வேண்டுமே என்ற கவலை பாதித்தது!

வேளையும், நாழியும் வந்தால் யார் தடுக்கமுடியும்? ராம சந்திரனே எதிர்பாராதவிதம் ஒரே வாரத்தில் கல்யாணம நிச்சய மாகியது. அவர் மனம்போலவே நல்ல அழகாயும், கவர்ன்மென்ட் உத்யோகஸ்தனுயும் மாப்பிள்ளை கிடைத்தார். தன சக்திக்கு மீறி மிகச் சிறப்பாய்க் கல்யாணத்தை முடித்தார்.

தம்பதிகள் தேனும் பாலும் போலவும், மணியும் ஓசையும் போலவும், பூவும் மணமும் போலவும் இல்லறம் வெகு இனபமாய் நடத்தினர்கள். இல்லறத்தை நல்லறமாக்கி அவர்கள் மகிழ்ச்சியை இன்னும் தூண்டிவிட மறுவருஷமே தங்க விக்ரகமபோல் ஒரு பெண் குழந்தையும் பெற்று எடுத்தாள், சீதா. சாக்ஷாத் திரு மகளைப்போல் உள்ள குழந்தைக்கு "லக்ஷ்மி" என்று பெயரிட்டு வாயார அழைத்து மகிழ்ந்தார்கள்.

அமைதியாய் ஓடிக்கொண்டு இருக்கும் கப்பல் புயலில் அகப்பட்டுக்கொண்டால் என்ன பாடுபடும்! ஒருநாள் தலைவலி என்றுகூட படுத்து அறியாத சீதாவுக்கு இடி இடித்ததுபோல எலும்புருக்கி நோய் என்று டாக்டர் சொன்னதும எல்லோர் உள்ளமும துடியாய்த் துடித்தது. மூன்று வயது நிரமபாத குழந்தை லக்ஷ்மிக்கு என்ன தெரியும்? தன்போக்காய்ச் சிரிதது விளையாடிக்கொண்டு இருநதது. (தொடரும்)

183192

1955 ஆம்

நடைபெற்ற

குழந்தைகள் நாடக
விழாவில்

திருவல்லிக்கேணி மஹாத்மாஜி ஸேவா
சங்கத்தின் பாலிகா கழகத்தினரால்
நடிக்கப்பட்ட

கருணை உள்ளம்

அணா 12

பாலர் மோகினி

12 சிறு கதைகள்

*

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

அவர்களுடைய இரண்டாவது புத்தகம்

*

ரூ. ஒன்று

ஜகன்மோகினி

26 தேரடித் தெரு
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

வை. மு. கோ. நாவல்கள்

தற்போது (ஜூன் 1955) கைவசமுள்ளவை

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. [illegible]
நிர்மல நீரோடை

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (விஜயம்)
மலர்ந்த இதயம்

ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சரதா)
ஆசைப்ரவாகம்
வெறுத்த வானம்
தெய்வீக ஒளி
ஜீவநாடி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று

ரூ. 1-12
அநாதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
லோகசாசனம்
[illegible]
அமைதியின் [illegible]
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
புனிதப் பதுமை
இன்பப் பரிசு
இசைப்புயல்
கலைக்கண்ணாடி
ஜெயபேரிகை
[illegible]
சுதந்திரப் பறவை

ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமுத்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
நளினசேகரன்
மாலதி

வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
[illegible]மைச் சித்திரம்
ம[illegible]மரை
தபால் [illegible]தம்
இனிய[illegible]
ஆண்ட[illegible]ன் அருள்
இந்திரமோகனா

அணா. 12.
பத்மமாலிகா
ப்ரேமாச்ரமம்
தியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்

அணா. 8
உருத்த இதயம்
கானகலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரிய லக்ஷ்மி

வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன்	1-4	ராணி சீலாவதி	1-0
மதமா, மனமா?	1-4	பெண்மணிக் கனல்	1-0
அவதாரமூர்த்தியின்		இருளில் ஒளி	1-4
அபூர்வ உயர்	1-8	தியாகபலி	0-12

வை. மு. பத்மினி

கிருஷ்ணார்ப்பணம்	
15 சிறு கதைகள்	[illegible]-4
பாலர் மோகினி	
12 சிறு கதைகள்	1-0

ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்: உரையுடன்	1-0
அபூர்வ ராமாயணம்	1-8

யோகி சுத்தானந்த பாரதியார்

சாந்தி கீர்த்தனம்	3-8
ஸ்ரீஸ்துதி	0-4
பாசுரப்படி ராமாயணம்	0-2
திருப்பாவை	0-2

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKIAMMAL is printed & published by V. M. PARTHA-SARATHY at the JaganMohini Press, 26. Car St., Triplicane, Madras 5.